
ஜனவரி 2011

விலை: 40/-



அழகிய ஆபத்து



நவாலியில் நடந்தது என்ன ?

# சிகரம் தொடு

இளையோர் மாதாந்தம்

சிகரம்:2 அடி:4 சிகரம் ஊடக இல்ல மாணவர் வெளியீடு ISSN 2012 -7928



கணி-நீ


தகவல் தொழில்நுட்ப இணைப்பிதழ் உள்ளே

## நம்மூர் நாயகர்கள்

PC
POWER UNIT
your best computer partner

# PC POWER UNIT

Computer Sales, Repairs, Networking & Maintenance



**தரம்மிக்க தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்ட சேவைகள்!**

**நம்பமுடியாத விலைகள்!**

**356B, லக்ஷன் பிளாசா, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


**Tel / Fax: 021-222 8816** **Mobile: 077-52 90 52 1**

**E-mail: pcpowerunit@yahoo.com**

ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் சுவிஸ் வாழ் வாமதேவன் தியாகேந்திரன் அவர்களால் உருவாக்கப்பட்ட தியாகி அறக்கொடை நிறுவன நிதிக்கான பல்பொருள் அங்காடி

# TCT MULTI TRADE CENTRE

A Venture of Income for Charity



உங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான உணவுப்பொருள்கள்
வீட்டுப் பாவனைப் பொருள்கள், உடு புடவைகள், காகிதாதிகள்
குழந்தைகளுக்கான உணவு, விளையாட்டுப் பொருள்கள் என
அனைத்தையுமே ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டம் மற்றும்
எல்லாவிதமான நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களுக்கும்
**சொர்ணாம்பிகை மண்டபம்**
முற்றிலும் குளிரூட்டப்பட்டது - 500 பேரை உள்ளடக்கும் வசதி
வைபவங்களுக்கான உணவு வகைகள்

**527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**Tel: 021 745 1896, 021 222 8025**
**E-Mail: tctmc@dialognet.lk**

நேற்றைய அனுபவங்களிலிருந்து
நாளைய சாதனைகளை நோக்கி

# சிகரம் தொடு
SIKARAM THODU

சிகரம் 2 அடி 4

சிகரம் ஊடக இல்லம்
மாணவர் வெளியீடு

**தொகுப்பு**
கோ.றுஷாங்கன்

**இணைத் தொகுப்பு**
ம.யசோநிதி

**வடிவமைப்பு**
அல்பேர்ட் பெஸ்ரியன்

**ஆக்கங்கள்**
ச.சிந்து
ம.யசோநிதி
சி.ஜெயந்தி
இ.ஷேனுஜன்
மு.சிவநாதன்
நா.சாந்தரூபன்
சு.நேதாஜி
ம.பிரசாத்
ஞா.கிரிஷாந்
அ.பெஸ்ரியன்
ஜெ.பாலகுமார்
த.தனுசன்
ச.தர்ஷா

**அச்சாக்கம்:**
கரிகணன் பிறின்டேர்ஸ்


**சந்தா விபரம்**
ஆண்டு சந்தா: 600 ரூபா
2 ஆண்டு சந்தா: 1,000 ரூபா
மாணவர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும்
ஆண்டு சந்தா: 500 ரூபா

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**சிகரம் ஊடக இல்லம்**
இல.221, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி : 077 77 33 931
மின்னஞ்சல்:
sikaramthodu@gmail.com

## உள்ளே...



08 அழகிய ஆபத்து



04 நம் ஊர் நாயகர்கள்



18 தமிழ் பேசிய ஆப்பு



10 குழந்தை பெறும் குழந்தைகள்



32 மூச்சுவிட 3 இடங்கள்




44 நவாலியில் நடந்தது என்ன?


### இன்னும்....

தை பிறந்தால் புது.......... 06
பனைமரக்காடு.......... 07
சான்றிதழ் மட்டும் போதுமா..?.......... 13
தொழில் உத்தரவாதமான கற்கைநெறிகள்.......... 14
அறிவு தரும் உணவு.......... 16
விபத்துக்களைத் தவிர்ப்போம்.......... 31
கண்ணே... நலமா...?.......... 34
ஆசியாவின் அதிசயத்தில் அங்கத்துவம்.......... 36
சிகரத்தைப் பிடிக்கச் சிரி.......... 40
யாழ்ப்பாணத்தில் ஷொப்பிங்.......... 46

கணனி-நீ



முகம் பார்த்துப் பேசலாம்
கணினி பராமரிப்பு 'டிப்ஸ்'
Basic Computer Technology
Microsoft Word
Adobe Photoshop
Googleக்குள் அடங்கும் கணினி
புதுவரவு



# நம்மூர் நாயகர்கள்

## AAA மூவீஸ் குறும்பட விருது வென்றோர்

இந்திய சினிமாவுடன் நின்றுவிடாமல் நம்மூரிலும் சினிமாத்துறை வளரவேண்டும் என்ற எண்ணத்துடன் AAA மூவீஸ் நடத்திய குறும்படப் போட்டியும், யாழ் ரில்கோ உல்லாச விடுதியில் நடைபெற்ற வெற்றிபெற்றோருக்கான விருது வழங்கும் விழாவும், எம்மண்ணின் இளம் கலைஞர்களை இனங்காட்டி கௌரவித்தது.

இந்த 'நம்மூர் நாயகர்' களின் குறும்படங்கள் எமது மண்ணிலும் திரைப்படத்துறையின் எழுச்சிக்கு கட்டியம் கூறி நிற்கின்றன.

இரண்டரை மணித்தியால முழுநீளத்திரைப்படங்களை விடச்சவாலான குறும்படங்கள், சுமார் 10-15 நிமிடங்களில், எடுத்துக்கொண்ட விடயத்தை மனதில் பதிக்கவல்லன.


போதிய ஒலி – ஒளிப்பதிவுக்கூட வசதிகள், சினிமா தொழில்நுட்ப வளங்களற்ற நிலையிலும், இந்தக் குறும்படங்கள் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருப்பதாக, விருதுகளை வழங்கிக் கௌரவித்த தமிழக இசையமைப்பாளர் சிற்பி வியந்து பாராட்டினார்.

AAA மூவிஸின் குறும்படங்களுக்கான போட்டியின் திறந்த மற்றும் பாடசாலை மட்டப் பிரிவுகளில் கலந்துகொண்ட 50 குறும்படங்களிலிருந்து, ஒவ்வொரு விருதுக்குமான குறும்பட வெற்றியாளர்களை, இசையமைப்பாளர் சிற்பியுடன் இணைந்து ஒளிப்பதி-வாளர் காசிப்பிள்ளை, தயாரிப்பாளர் M.S.லிங்கம் ஆகியோர் தெரிவுசெய்தனர்.

### ஊனம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சி.சிவராஜ் எனும் இளம் கலைஞனின் 'ஊனம்', சிறந்த குறும்படமாகத் தெரிவுசெய்யப்பட்டது.

கால் ஊனமுற்ற இளைஞன் ஒருவனும், சாதாரண இளைஞன் ஒருவனும் காலையில் எழும்பித் தமது கடமைகளை செய்வதோடு கதை ஆரம்பிக்கிறது.



நேரத்துடனே எழும்பும் ஊனமுற்ற இளைஞன் தையல் கடையில் வேலைக்குச் செல்கிறான். எந்தத் தொழிலும் செய்யாமல் நேரந்தாழ்த்தி எழுந்த மற்றைய இளைஞன், சக நண்பர்களுடன் வீதியில் பொழுதுபோக்கிக் கொண்டிருக்கும்போது, ஊனமுற்ற இளைஞன் வீதியில் தடுக்கி விழுவதைப் பார்த்துச் சிரிக்கிறான்.


ஊனமுற்ற இளைஞன் தையல் தொழில் முடிந்து வீடு திரும்பும்போது மதுபோதையில் வீதியில் விழுந்து கிடக்கும் அவனை, எந்தப் பேதமும் பாராமல் தூக்கிவிடுகிறான் என்பதுதான் கதை.

"இந்தக் கதைக் கருவுக்காக சிறந்த குறும்படம் என்ற விருதைப் பெற்றபோதும், தொழில்நுட்ப ரீதியில் இன்னும் நாம் முன்னேற-வேண்டும்" என்கிறார் இக்குறும்படத்தை இயக்கிய சிவராஜ்.

"க.பொ.த. உயர்தரத்-தில் வர்த்தகப் பிரிவில் படித்திருந்தாலும், அண்ணனின் விருப்பத்-தால் இந்தியா சென்று Visual Communication படித்தேன். இதனாலேயே எனக்குச் சினிமாத்துறையில் ஆர்வம் ஏற்பட்டது" என்று கூறிய அவர், "கல்வித்தேவைக்காக நான் குறும்படங்களை இயக்கி, நடிக்க ஆரம்பித்தாலும், யாழ்ப்பாணத்தில் AAA மூவிஸினால் வழங்கப்பட்ட விருது என்னை இன்னும் சாதிக்கத் தூண்டியுள்ளது" என்று பெருமையுடன் கூறினார்.



**"நம்மவர்கள் 'யாழ்ப்பாணத்தில் சினிமா' என்பதை நகைப்புக்குரியதாகவே பார்க்கிறார்கள்"**



இவரது முதல் குறும்படம் Angel- Daughter of Yemen ஆகும். தற்போது AAA மூவிஸ் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கும் 'பனைமரக்காடு' திரைப்படத்தில் துணை இயக்குனராகப் பணியாற்றும் இந்தத் துடிப்புள்ள இளைஞர, "வீட்டில் முழு ஆதரவு உள்ளபோதும், வெளியே 'யாழ்ப்பாணத்தில் சினிமா' என்பதை நகைப்புக்குரியதாகவே பார்க்கிறார்கள்" என்று தனது வேதனையை எம்முடன் பகிர்ந்துகொண்டார்.

"ஊனம் குறும்படத்தை வீதியில் எடுத்துக்கொண்டிருந்தபோது, 'பெரிய பாலுமகேந்திரா என்ற நினைப்பு' என்று பலரும் நக்கலடித்தார்கள்" என்று கூறிய சிவராஜ், சிறந்த குறும்படமாகத் தெரிவான 'ஊனம்' அவர்களுக்கே சமர்ப்பனம் என்கிறார்.

இந்தக் குறும்படம் முழுவதும் தனது நண்பர்களின் பங்களிப்பே உள்ளது என்று கூறிய அவர், அனைவருக்கும் தான் நன்றிக்கடன் பட்டிருப்பதாகவும் சிலிர்த்தார்.

தற்போது இரண்டு குறும்படங்களுக்கான திரைக்கதை உள்ளதாகவும், அவற்றை விரைவில் இயக்கவுள்ளதாகவும் கூறும் சிவராஜின் வெற்றிப்பயணம் 'சிகரம் தொடு'ம் என நாமும் வாழ்த்துகிறோம்.

## NEEDS

வழங்கப்பட்ட 14 விருதுகளில் 5 விருதுகளைத் தட்டிச்சென்றது 'NEEDS' (தேவைகள்).

இந்தக் குறும்படத்தின் இயக்குனர் ஜூலியன்ட் ஆனந்த ரமணன் சிறந்த இயக்குனராகவும், சிறந்த ஒளிப்பதிவாளராக பிரபுத்தா கருணாநாயக்கவும், சிறந்த ஒலிப்பதிவுக்காக இவர்களின் Trinco Creations உம், சிறந்த படத்தொகுப்புக்காக ஆ.சில்வாவும், சிறந்த நடிகையாக இந்திராணி சந்திரலதாவும் விருது பெற்றனர்.

மோட்டார்வண்டியில் தொலைதூரம் பயணம் செய்யும் இரண்டு தமிழ் இளைஞர்கள், கும்மிருட்டில் திடீரென வாகனம் பழுதடைந்துவிடவே, காட்டு யானைகள் நிறைந்த திக்குத்திசை தெரியாத காட்டில் ஒரு வீட்டை இனங்காணுகின்றனர்.

சிங்கள மொழி பேசும் தாயும் மகளுமென அங்கிருந்த இருவரும், யாரென்றே தெரியாத இந்த இளைஞர்களின் அவசரத் தேவையான இரவுநேரத் தங்குமிடத்தையும், வயிறார உணவையும் தயக்கமின்றிக் கொடுக்கின்றனர் - இதுதான் கதை.

"சிறுவயதிலிருந்தே நடிப்பு, நாடகம் என எனது ஆர்வம் கலைத்துறை சார்ந்ததாகவே இருந்தது" என்று கூறும் ஆனந்தரமணன், மன்னாரைச் சேர்ந்தவர் என்றாலும், திருகோணமலையிலேயே நீண்டகாலம் வாழ்ந்துவருகிறார்.

அழகுக்கலை நிபுணர் என்பதால் சொந்தமாக Beauty Parlour ஒன்றை நடாத்திவரும் இவர், தந்தையாரின் அர்ப்பணிப்புடனும், நண்பர்களின் உதவியுடனும், ஆசிரியர்களின் வழிகாட்டுதலின் கீழுமே கலைத்துறையில் குறிப்பாக நாடகத்துறையில் சாதிக்க முடிந்தது என்று அனைவருக்கும் நன்றி கூறுகிறார்.

1983ம் ஆண்டிலிருந்து நடிக்க ஆரம்பித்து, நாடகங்களையும் இயக்கியுள்ள இவரது முதல் சாதனையாக, 1995ஆம் ஆண்டு பாடசாலை மட்டப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற 'ஏணிப்படிகள்' அமைந்திருந்தது.

1996 இல் இவரது 'புகலிடம்' நாடகம் தேசியமட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

கலாமன்றம் ஜெகநாதன் (நக்கீரன்) அவர்களின் வழிநடத்தலின்கீழ் ஆரம்ப காலங்களில் தான் நாடகத்-



துறையில் மிளிரக்கூடியதாயிருந்தது எனக்கூறும் ஆனந்தரமணன், 2007ஆம் ஆண்டுமுதல் Scriptnet SL இல் இணைந்து மு.ஞானதாஸின் வழிகாட்டலின்கீழ் குறும்படங்களை இயக்க ஆரம்பித்-தாகக் கூறுகிறார்.

'Knives', 'Needs ' என்பன தனது பெயரை உலகறிய வைத்த குறும்படங்கள் என்கிறார் அவர்.

"இந்தியத் திரைப்படங்களைவிட, ஈரானிய- ரஷ்யத் திரைப்படங்களை விரும்பிப் பார்ப்பேன்.



## "இலங்கைக்கென தனித்துவமான திரைப்படங்களை உருவாக்குவதே எனது நோக்கம்"

இலங்கைக்கென தனித்துவமான திரைப்படங்களை உருவாக்குவதே எனது நோக்கம்" என்று கூறிய ஆனந்த ரமணன், குறும்படங்களை தானே தயாரிப்பதால் நிதிச்செலவு ஒரு சவாலாக இருப்பதாகச் சொன்னார்.

தன்னுடனிருக்கும் Posh Beauty Parlour ஊழியர்கள், நண்பர்கள், தொழினுட்ப உதவியாளர்கள் என எல்லோருடைய பங்களிப்புமே இந் வெற்றிக்குக் காரணம் என நன்றி கூறுகிறார் அவர்.

# கரும்பலகை

AAA மூவிஸினால் வழங்கப்பட்ட விருதுகளில் சிறந்த திரைக்கதை, சிறந்த கலை இயக்கம் மற்றும் சிறந்த நடிகர் ஆகிய விருதுகளைப் பெற்றது 'கரும்பலகை',

வேலையற்றிருக்கும் பட்டதாரி இளைஞன் ஏமாற்றங்கள் தோல்விகளுக்கு மத்தியில் எவ்வாறு வேலையைப் பெற்றான் என்பதை தந்தை மகன் என இரண்டு பாத்திரங்களுக்கூடாகச் சொல்கிறது கரும்பலகை.





## "ஒத்துழைப்புத் தராவிட்டாலும் வீணாக விமர்சிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்"

விறகு வெட்டிப் பிழைக்கும் வாய்பேச முடியாத தந்தை தனது மகனுக்காக இரவு பகல் பாராது வேலை செய்கிறார். கரும்பலகையில் எழுதிக் காண்பிப்பதன் மூலமே இவர்களுக்கிடையிலான தொடர்பாடல் நடைபெறுகிறது.

மகனின் சப்பாத்து பழையதாகி-யதைப் பார்த்து தான் சேமித்து-வைத்த சில்லறைப் பணத்தை தாள்காசுகளாக்கி மகனின் சான்றிதழ்கள் இருந்த fileஇல் வைக்கிறார் தந்தை. மறுநாள் நேர்முகப் பரீட்சைக்கு இந்த fileஐக் கொண்டுபோன மகனுக்கு வேலை கிடைத்துவிடுகிறது. தான் சேமித்த பணத்தில் அவர் ஒரு சப்பாத்தும் வாங்கிவிடுகிறார்.

வீடு வந்த பின் புதுச் சப்பாத்துடன் வேலையும் பெற்றிருக்கும் மகனைப் பார்த்துப் பூரிக்கிறார் தந்தை. இருவருக்குமே file இருந்த பணமே வேலை பெற்றுத்தந்தது என்பது தெரியாமலே படம் நிறைவடைகிறது.

இக்குறும்படத்தின் நாயகன் கலிமாறன் மற்றும் திரைக்கதாசிரியர் சத்திய மென்டிஸ் ஆகிய இருவருமே, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சிங்கள திரைப்பட இயக்குநர் பிரசன்ன விதான-கேயின் குறும்பட பயிற்சிப் பட்டறை-யில் கலந்துகொண்டவர்கள். இதனாலேயே குறும்படம் பற்றிய ஈர்ப்பு ஏற்பட்டதாக கூறும் இவர்கள், Scriptnet SL இன் பயிற்சிப்பட்டறையிலும் குறும்படம் பற்றிய நுட்பங்களைத் தெரிந்துகொண்டதாகச் சொல்கிறார்கள்.முதன்முதலாக இவர்கள் இருவரும் உருவாக்கிய கரும்பலகை, இவர்களுக்கு மட்டுமன்றி சிறந்த நாயகனாகத் தெரிவான இரா.சிவலிங்கன் ஐயாவுக்குமே பெருமை சேர்த்துள்ளது.

கமராவோ, தேவையான பணமோ இன்றி சிரமப்பட்டுத் தயாரித்த இந்தப் படைப்பை உறவினர்கள் கூட வரவேற்காத நிலையில், AAA மூவிஸினால் வழங்கப்பட்ட விருதுகள் தம்மை ஊக்குவித்துள்-ளதாக இவர்கள் கூறினார்கள்.

தங்கள் முதல் படைப்பு தம்மை ஊக்குவித்துள்ளபோதும், தம்மைப்போன்ற கலைஞர்கள் சமூகத்தில் கிண்டலாகவே பார்க்கப்படுகின்றார்கள் என்பதே இவர்களது கவலை.

"படைப்புக்களை வெளியிடும்-போதோ அல்லது உருவாக்கும்-போதோ ஒத்துழைப்புத் தராவிட்டா-லும் வீணாக விமர்சிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்" என்று இவர்களிடம் தாம் கேட்க விரும்புவ-தாக இவர்கள் கூறினர்.

இவர்களைப்போன்ற நம்மூர் நாயகர்களை ஊடகங்கள் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தாலும், உயர்த்த வேண்டியவர்கள் மக்களே!

சமூகத்தின் வரவேற்பு இருந்தால் இத்தகைய கலைஞர்கள் உயர்ந்து 'சிகரம் தொடு'வார்கள். ●

- இ. ஷேனுஜன்
2ம் அணி








தமிழக சினிமாக்களையே கண்டு இரசித்துவரும் நமது யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு திரைப்படத்தைத் தயாரிக்கும் முயற்சியில் AAA மூவீஸ் ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே கோடம்பாக்கம், காதல் டாட் காம், பேசாத கண்ணும் பேசுமே ஆகிய தமிழக திரைப்படங்களைத் தயாரித்த அனுபவமுள்ள செவ்வேள், AAA மூவீஸ் மூலம் இந்த முயற்சியை தனது சொந்த இடமான யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளார்.

சுமார் இரண்டரைக் கோடி ரூபா செலவில் தயாரிக்கப்படும் பனைமரக்காடு முற்றிலும் யாழ்ப்பாணத்திலேயே தயாரிக்கப்படவிருப்பதுடன், இதன்மூலம் யாழ்ப்பாணத்தில் சுமார் 180 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும், டிசம்பர் 19ம் திகதி பனைமரக்காடு படப்பூஜையை முடித்த பின், 20ம் திகதி ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது செவ்வேள் கூறினார்.

தொழில்நுட்பத்துறையில் யாழ்ப்பாணத்தில் அனுபவமுள்ளவர்கள் இல்லாத காரணத்தினால் துறைசார்ந்த வல்லுனர்கள் இந்தியாவிலிருந்து வருவிக்கப்படுவார்கள் என்றும், அவர்கள் மூலம் யாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்கி எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்திலும் திரைப்படத் தொழில்நுட்பக் கலைஞர்கள் உருவாக்கப்படுவார்கள் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

6 மாத காலப் பகுதிக்குள், இலங்கைத் திரைப்படக்கூட்டுத்தாபனத்தின் முழு ஒத்துழைப்புடன், இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக இந்தத் திரைப்படம் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட உள்ளது. "இலங்கையிலேயே




தயாரிக்கப்பட்டு, இலங்கையிலேயே வெளியிடப்படவிருக்கும் இந்தத் திரைப்படம் உண்மையில் ஒரு சாதனையாக இருக்கும். இதன் வெற்றிக்கு ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களினதும் ஒத்துழைப்பு மிக அவசியம்" என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.



செவ்வேள்

**திரைக்கதை:**

5 வயதுக் குழந்தையுடனிருக்கும் கணவரை இழந்த ஒரு பெண் ஒரு இளைஞனைக் காதலிப்பதை அடிப்படையாகக் கொண்டதே பனைமரக்காடு திரைப்படம். எனினும், வழமையான தமிழ் சினிமாப் படங்களைப்போல் இதிலும் 5 பாடல்கள், சண்டைக் காட்சிகள் என்பனவும் இடம்பெறும் என்று தெரிவித்த செவ்வேள், திரைப்படமொன்றின் வெற்றிக்கு இவையும் அவசியம் என்று விளக்கினார்.

30 வருட காலமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்களுக்கு இந்தத் திரைப்பட முயற்சி ஒரு ஊக்குவிப்பாக அமையும் என்றும் அவர் மேலும் கூறினார்.

**இயக்குநர் கேசவராஜா**

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த பனைமரக்காடு இயக்குநர் கேசவராஜா, இது முற்றிலும் மக்களின் உண்மை வாழ்க்கை தொடர்பான திரைப்படமாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

"முழுக்க முழுக்க மக்கள் சம்பந்தப்பட்ட, கண்ணால் கண்ட உண்மைக் காட்சிகளே இந்தத் திரைப்படத்தில் இடம்பெறும். அரசியலுக்கு இதில் எந்த இடமும் கிடையாது" என்று விளக்கிய அவர், "இந்தத் திரைப்படம் இலங்கையின் தமிழ் பேசும் சினிமா என்ற எல்லையையும் தாண்டி தமிழர்களின் சினிமாவாக இருக்கும்" என்று கூறினார்.

சிங்கள மற்றும் தென்னிந்தியக் கலைஞர்களுடன் இணைந்து தயாரிக்கப்படவுள்ள இந்தப் படத்தின் மூலம் இன ஐக்கியத்துக்கும் வழியேற்படும் என்றும் அவர் கூறினார்.

திரைப்படத்தில் பேச்சு மொழி அசல் இலங்கைத் தமிழ் மொழியாகவே இருக்கும் என்றும் அவர் கூறினார்.



**- .கோபி**

**2ம் அணி**

**2000ம்** ஆண்டில் வெறும் 0.5% ஆகவிருந்த இலங்கையின் இணையப் பாவனை, 2009இல் 5.5% ஆகி, 2010 ஜனவரியில் 8.3% ஆக திடீரென உயர்ந்திருப்பதாக இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இலங்கையின் மொத்தச் சனத்தொகையான 21.5 மில்லியன் பேரில், கிட்டத்தட்ட 1.8 மில்லியன் மக்கள் இணையத்தைப் பயன்படுத்துவதாக அது கூறுகிறது.


இதன்படி, 2009இலிருந்து 2010இல் இணையப் பாவனை வீதாசாரம் திடீரென 2.8 சதவீதத்தினால் உயர்ந்திருக்கிறது. இலங்கையின் இணையப் பாவனையில் ஏற்பட்ட இந்தத் திடீர் வளர்ச்சிக்கு, 2009 பிற்பகுதியில் இலங்கையின் வட பகுதிக்கு, குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு தொலைத்தொடர்பு வசதிகள் வேகமாக விரிவாக்கப்பட்டமையும் ஒரு முக்கிய காரணி என்று ஊகிக்க இடமுண்டு.

யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 8,000 பேர் Slt தொலைபேசி இணைப்பைப் பெற்றிருப்பதுடன், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தி வருவதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேகத்தில் இணைய இணைப்புக்களும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்தேயுள்ளது.

இணையப் பாவனை இந்தளவுக்கு அதிகரித்திருப்பது மகிழ்ச்சியான விடயமேயாயினும், கல்வி, சுகாதாரத் தேவைகளுக்காக இணையத்தைப் பயன்படுத்துவோரைவிட, ∴பேஸ்∴புக், டுவிற்றர் போன்ற சமூக வலைப்பின்னல்களின் பாவனையே இலங்கையில் இளைஞர்கள் மத்தியில் பரவியுள்ளது என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கூறுகிறது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற காலம் போய் இன்று மாதா, பிதா, **கூகிள்**, தெய்வம் என்ற நிலை இணையப் பாவனையால் ஏற்பட்டிருப்பதாக இளைஞர்கள் மத்தியில் பேசப்படுகிறது.

## Face book




500 மில்லியன் பயனாளிகளைக் கொண்டு இணைய உலகின் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ∴பேஸ்∴புக்கின் தாக்கம் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் மத்தியில் வைரஸ் தொற்றாய் பரவி, பலரையும் கட்டிப்போட்டிருக்கிறது.

∴பேஸ்∴புக்கில் தினமும் Status போடுவதே பலருக்கும் இன்று பிரதான பொழுதுபோக்காகியிருக்கிறது. இன்னும், Photo, Video Share மற்றும் இணைய விளையாட்டுக்களான Barn buddy, Farmville என இதன் தாக்கம் விரிந்துகொண்டே செல்கின்றது.

இதனூடாக, பழைய-புதிய நண்பர்கள் சந்திப்பும், விரிவாக்கமும் சாத்தியமாகியிருக்கிறது உண்மைதான் என்றாலும், இதுவே நேரத்தை உறிஞ்சி, சமயங்களில் கடமைகளை மறக்கவும் செய்துவிடுகிறது.

## Chatting

Face book, Twitter, Live Messenger, Yahoo Messenger, Gmail Chatting, Skype , Blog… எனப் பல்வேறு தளங்களினூடாக இணைய அரட்டை பார்த்தீனியக் களைபோலப் பரவியுள்ளது. கைத்தொலைபேசியினூடாக sms பரிமாறிய காலம் போய், இன்று இணைய அரட்டையிலேயே காலம் தொலைகிறது.

பால், வயது வித்தியாசமில்லாமல் சிறுவர்கள், ஆண்கள்,



பெண்கள் என அனைவரும் விரும்பும் ஒரு பொழுதுபோக்காக இது மாறியிருக்கிறது. தினமும் யாழ்ப்பாணத் திலுள்ள netcafe களைப் பார்த்தால், அரட்டையடிப்போரையும், அதற்காக வாசலில் காத்திருப்போரையும் காண முடியும்.



“எனது கல்வித்தேவைக்கான தகவல்களைப் பெறுவதற்காக அல்லது ஈமெயிலில் செய்தி அனுப்புவதற்கு மட்டுமே பெரும்பாலும் நான் இணையத்தை இணைப்பேன். அந்த நேரம் பார்த்து யாராவது இணையத் தொடர்பிலுள்ள நண்பர் Hi! போடுவார். சிலவேளைகளில் தொடர்பிலிருப்பவர்களைக் கண்டு நானே ஆரம்பிப்பேன்…” என்று சொல்லும் நண்பரொருவர்,

“பிறகென்ன, hi! தொடக்கம் bye!! வரை கதைத்து முடிக்கும்போது நான் வந்த வேலையை மறந்தே விடுவேன்” என்கிறார் வேடிக்கையாக.

அரட்டை முடிய வேலையைப் பார்க்கத் தொடங்கினால், மனம் சோர்ந்து, நித்திரை வந்து, நாளை பார்க்கலாம் என்று எழுந்து போய்விடுவாராம் அவர். எப்படியிருக்கி-றது கதை?

நடுநிசியில் கூட உறக்கமின்றித் தொடரும் இந்த இணைய அரட்டை இப்படி எல்லோரையும் தனக்குள் சிக்கவைத்துக் கொண்டுவிடுகிறது.

இங்கே அரட்டை அடிப்போர் பலர் தம்மைப் பற்றிய பொய்யான தகவல்களைத்தான் பகிர்ந்துகொள்கின்றனர் என்பது இன்னுமொரு சமாசாரம். பெண்களின் பெயரில் அரட்டை அடித்துச் சுத்துமாத்தும் ஆண்கள், காதலிப்ப-தாக நடித்துப் பணத்தைக் கறந்தபின் bye சொல்லும் பெண்கள் என ஏராளம் விவகாரங்கள் நடந்தேறுகின்றன. இன்னும் சிலர் இதைப் பயன்படுத்தி நிறையவே சம்பாதிக்கவும் செய்கின்றனர் (ஒரு வகையில் இவர்கள் புத்திசாலிகள்).

## இணையத் தூண்டில்

இணையத்தில் வேலை செய்யும்போது, திடீரென உங்கள் கணினித் திரையின் ஒரு மூலையில் ஒரு எளிய விளையாட்டுத் தோன்றும். You are a Looser! என பெரிய எழுத்தில் போட்டு உங்கள் கவனத்தைச் சுண்டியிழுக்க அது முனையும். விட்டேனா பார் என்று அந்த விளையாட்டை விளையாட முற்படும்போது, உங்களை அறியாமலே அவர்களுடைய இணையத்தளத் துக்குக் கொண்டுசெல்லப்படுவீர்கள்.

அமெரிக்காவில் கிரீன் காட், குடும்பத்தோடு விசா, நடிகர்கள் தேவை, உங்களுக்கு ஒரு இலட்சம் டொலர் பரிசு விழுந்திருக்கிறது!, வீட்டிலிருந்தே நாளுக்கு 500 டொலர் உழைக்கலாம், அழகிய பெண் காத்திருக்கிறாள் என்று பலவாறாகக் கூறி உங்களை தங்கள் இணைய-பக்கத்துக்கு அழைக்கின்றனர், உள்ளே சென்றபின் எப்படியேனும் உங்கள் பணத்தையோ நேரத்தையோ வீணடிக்காமல் வெளிவருவது கடினம். அதேநேரம் நீங்கள் இணையபக்கங்களில் நேரத்தை செலவழிக்க உங்களை அறியாமல் கணனியில் வைரஸ், மால்வேர் போன்றவற்றை கணனியில் நுழைந்து விடுகின்றனர். அதை அழிக்க சில மணித்தியாளங்கள் தேவைப்படும்.

இவை அல்லாமல் இணையப்பாவனை மூலம் வங்கிப் பரிமாற்றங்கள் செய்பவர்கள், பொருட்களை வாங்குபவர்கள், இரசீது கட்டுபவர்கள் போன்றோர் வேறுவிதமாக பாதிக்கப்படுகின்றனர். வங்கியிலிருந்து வரும் மின்னஞ்சல் போலவே வரும் படிவங்களில் உங்கள் பெயர், முகவரி மற்றும் பாவனையாளர்பெயர், மற்றும் கடவுச்சொல் போன்றவற்றை பெற்றுக் கொண்டு அடுத்த சில நிமிடங்களிலேயே உங்கள் வங்கிக்கையிருப்பை அபேஸ் செய்து விடுவார்கள்.

எனவே கவனமாக கிறெடிட் கார்ட் இலக்கம் மற்றும் கடவுச்சொற்களைக் கையாளுங்கள். இவையெல்லா வற்றுக்கும் மகுடம் சூட்டும் ஆபாசத் தளங்கள். இந்தத் தூண்டில்களில் சிக்கினால் தொலைந்தோம்!

## நம்மை நாமே பாதுகாப்போம்!

வீதிக்கொரு **netcafe,** வீட்டுக்கு வீடு **Broadband, ADSL, Dongle** என்று இணைய வசதி பெருகியிருக்கி-ன்ற அரிய வாய்ப்பை வரப்பிரசாதமாக்கிக் கொள்ள வேண்டியது நாம்தான். உள்ளங்கைக்குள் உலகத்தைப் பார்க்க கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை வெறுமனே அரடடைகளிலும், அழிவுப் பாதையிலும் ஏன் தொலைக்கவேண்டும்?

அறிவியல் நமக்களித்த வரமான இணையம் எமது வாழ்வைத் தொலைக்கும் அழகிய ஆபத்தாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டியவர்கள் நாம்தான்.

பொழுதுபோக்குத் தேவைகளுக்கு குறிப்பிட்டளவு நேரத்தை ஒதுக்கிவிட்டு, கல்வி வளர்ச்சிக்காகவும், அறிவியல் தேர்ச்சிக்கும் இணையத்தைப் பயன்படுத்தி இமயத்தைத் தொடுவோம். ●

**- ஞா.கிரிசாந்**

# குழந்தை பெறும் குழந்தைகள்

திருமணமாகாமல் இளவயதில்



போரின் கொடுமைக்குள்ளும் நெருக்கடிகளுக்குள்ளும் சிக்கியிருந்த இளம் சந்ததியினர் இப்போதுதான் இயல்பு வாழ்வை முழுமையாக அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். எனினும், ஒரு சிலர் இந்தச் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதால், முழுப்பேருக்கும் கெட்ட பெயர் சுமத்தப்படுகிறது. இதன் விளைவு-கள் இளவயதுக் கர்ப்பம், பிறந்த குழந்தைகளை தூக்கி வீசுவது வரையில் சென்றுவிடுவதால் பிரச்சினை மேலும் சிக்கலாகி-விடுகிறது.

போர்க்காலச் செய்திகள் போன்று பரபரப்பாகப் பேசப்படும் விவகார-மாக இது ஊடகங்களால் கையாளப்படுகிறது. தவறுகள் சுட்டிக்காட்டப்பட வேண்டியவையே என்றாலும், இனிமேல் அவை நடைபெறாமல் தடுக்கும் வழிவகைகளைக் காணவேண்டியதே ஊடகங்களின் தலையாய பொறுப்பு. எல்லை மீறும் செயற்பாடுகள் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் பற்றிய விளக்கம் இருக்குமானால் இந்த நிலைமையை இளையோர் தவிர்த்துக்கொள்ளலாம்.

இதற்காக, இளவயதுக் கர்ப்பங்கள் ஏன் ஏற்படுகின்றன, இதனால் என்ன பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ளவேண்டி வரும், என்ற கேள்விகளுடன், யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் தாய்-சேய் நலப்பிரிவின் பொதுச் சுகாதார தாதி ஒருவரிடம் பேச்சுக்கொடுத்தோம்.

"காதலின் பிடியில் சிக்கும் பெண்கள் தன் நிலை மறந்து செய்யும் பிழையினாலேயே இளவயதில் கர்ப்பமடைகிறார்கள்;" என்று கூறிய அவர், 2009 ஒக்டோபர் மாதம் வரையில் 337 இளவயதுக் கர்ப்பிணிகள் பதிவாகியுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலையும் வெளியிட்டார்.

இடம்பெயர் முகாம்களிலும், பின் தங்கிய கிராமப்புறங்களிலுமே இந்த நிலை அதிகமாக இருப்பதாகவும், இதைத் தடுப்பதற்கு தாம் எடுக்கும் முயற்சிகள் உரிய பலனைத் தரவில்லை என்றும் அவர் வேதனையுடன் கூறினார். 'காதலித்தவனின் பிள்ளையைச் சுமந்தாலே அதைக் காரணம் காட்டி அவர்களைச் சேர்த்து வைக்க முடியும்' என்று சில தாய்மாரே சொல்வதாக அவர் கவலை தெரிவித்தார்.



'குடும்பம்' என்ற கட்டுக்கோப்புக்கு விதிவிலக்காக, திருமணமாகாமல் குழந்தையைப் பெற்றெடுக்கும் ஒரு பெண்ணால், பிள்ளைக்குப் பூரண பராமரிப்பை வழங்கவோ, அன்பு செலுத்தவோ, சரியான முறையில் பாலூட்டவோ முடியாது. இதனால் ஒரு குழந்தையின் வாழ்வும் எதிர்காலமும் பிறப்பிலேயே சீரழிக்கப்படுகிறது.

கர்ப்பம் அடையும் பெண்கள் மட்டுமன்றி, திருமணமாகி கணவன் வெளி-நாட்டிலுள்ள, கணவனைப் பிரிந்து வாழ்கின்ற பெண்களே அதிகம் பிள்ளைகளைப் பெற்று தெருவில் வீசுகிறார்கள் என்ற திடுக்கிடும் தகவலையும் அவர் கூறினார்.

"பொதுவாகப் பெண்கள் கர்ப்பம் அடைவதற்குரிய ஆகக்குறைந்த வயதுதெல்லை 20 ஆகும். இதற்குக் குறைந்த வயதானவர்களின் கர்ப்பப்பை கர்ப்ப-த்தைச் சுமப்பதற்குத் தேவையான பலத்தைக் கொண்டிராது. அத்துடன், வளரும் குழந்தையை பெற்றுப் பராமரிக்கும் பக்குவ நிலையையும் அவர்கள் அடைந்தி-ருக்க மாட்டார்கள். இதைப் பெண்கள் முதலில் அறிந்து கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார் அந்தத் தாதிய சகோதரி.

## கருக்கலைப்பு

தவறான வழியில் கருவைச் சுமப்பவர்கள் உடனே கருக்கலைப்பை மேற்கொள்கிறார்கள். இது சட்டவிரோதமான செயல் என்று விளக்குகிறார் சட்ட வைத்திய அதிகாரி மு. இரத்தினசிங்கம்.



“இலங்கையைப் பொறுத்தவரையில் கர்ப்பத்தினால் தாயின் உயிருக்கு ஏதும் பாதிப்பு ஏற்படும் என்றால் மட்டுமே மருத்துவ ரீதியான கருக்கலைப்பு செய்யப்படும். வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் கருக்கலைப்பு செய்வது குற்றமாகும்” என்கிறார் அவர்.

“வசதி படைத்தவர்கள் காசைக் கொடுத்து யாராவது ஒரு வைத்தியர் மூலமாக கருக்கலைப்பை மேற்கொள்கின்றனர். குறைந்த வருமானம் உடையவர்கள் எந்தவித பாதுகாப்பும் அற்ற நிலையில் கிருமித்தொற்றுள்ள உபகரணங்களையும் ஆபத்தான மருந்துகளையும் பயன்படுத்தி சட்டவிரோதமாகக் கருக்கலைப்புச் செய்கின்றனர். இது ஆபத்தானது” என்று கூறிய அவர், இவ்வாறான கருக்கலைப்பை மேற்கொள்வதால், அதீத இரத்தப்போக்கு ஏற்பட்டு தாய் இறக்க நேரிடும் என்று எச்சரிக்கிறார்.

சிலசமயம் கர்ப்பப்பையில் ஏற்படும் பாதிப்புக் காரணமாக குழந்தை பெறும் தகுதியை நிரந்தரமாகவே இழக்க நேரிடுவதுடன், கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படுவதற்கு வாய்ப்பும் இருப்பதாக அவர் கூறுகிறார்.

இதைவிடவும், ஒரு பெண் திருமணமாகாமல் கர்ப்பமடைந்து கருக்கலைப்புச் செய்தால், பின்பு திருமணம் செய்யும்போது குற்றவுணர்வை ஏற்படுத்தி திருமண வாழ்க்கையே பாதிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் சொல்கிறார்.

“16 வயதுக்குக் குறைந்த பெண் சட்டபூர்வமற்ற முறையில் கர்ப்பமடைவாளாயின், அவளது சம்மதத்துடனே உடலுறவில் ஈடுபட்டிருந்தாலும் அது பாலியல் வல்லுறவுக் குற்றமாகும். இந்தப் பெண்ணுடன் உடலுறவில் ஈடுபட்ட ஆண் இதனால் தண்டனை அனுபவிக்க நேரிடும்” என்று கூறிய அவர், “குழந்தை குறித்த ஆணுடையது என்பதற்கான நேரடிச் சாட்சி இல்லாதவிடத்து, பிரசவத்தின் பின்னர் தாய், குறித்த ஆண், பிள்ளை மூவரினதும் குருதி மாதிரி எடுத்து DNA பரிசோதனை செய்து, தந்தை யாரென்பது உறுதி செய்யப்பட்டு நீதிமன்றில் தீர்ப்பு வழங்கப்படும்” என்று எச்சரித்தார்.

இவ்வாறே, மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு பெண் 16 வயதுக்கு மேற்பட்டவளாயிருந்தாலும் அப்பெண்ணுடன் உடலுறவு கொள்பவருக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யும் இடத்து தண்டனை வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

“இள வயதில் காதல் வருவது தவறல்ல. ஆனால் திருமணமாகாமலே கர்ப்பமடைவது தவறு. இதுவே, கருக்லைப்பு, சிசுக்கொலை, சிசுவைக் கைவிடல் என நீண்டு செல்லும் பிரச்சினைகளுக்குக் காரணமாகின்றது” என்று சொல்கிறார் அத்தாதிய சகோதரி.

“பெற்றோர் தேவைக்கு அதிகமாகப் பிள்ளைகளுக்கு பணம் கொடுக்காமல், எப்போதும் அவதானமாக இருக்கவேண்டும். குறிப்பாகத் தாய்மார் தமது பெண் பிள்ளைகளின் நலனில் அதிகம் அக்கறைகாட்டவேண்டும்” எனவும் ஆலோசனை கூறுகிறார் அவர்.

“பெற்றோர் தமது வேலைகளுக்கு மத்தியிலும் ஒருசில மணித்தியாலங்களை பிள்ளைகளுக்காக ஒதுக்கி அவர்களுடன் நட்புறவுடன் உரையாடி பிள்ளைகள் மனம் திறந்து பேசுவதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இசை, நடனம், வாசிப்பு, விளை-யாட்டு, யோகா என பல விடயங்க-ளிலும் பிள்ளைகள் ஈடுபட்டால் மனம் வேறு திசைகளில் அலைபாய்வதைத் தடுக்கலாம்” என்று ஆலோசனை கூறினார் அவர்.

குறிப்பாக பாடசாலை ஆசிரியர்களுக்கும் இதில் முக்கிய பங்குண்டு என்று குறிப்பிட்ட அவர், இதற்கு பாடசாலைகளின் ஒத்துழைப்பு மிக அவசியம் என்று வலியுறுத்தினார்.

“நாம் 2004ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் சுகாதாரத்தைப் பற்றி அறிவூட்டும்




**அல்லையிலே**
**வாழ்பவளாம் முல்லை**

**அவள் அழகால்**
**ஆடவர்க்குத் தொல்லை**

**“இல்லை” எனும் தன்**
**இடையை**
**இல்லை எனா**
**தீந்ததனால்**

**“இல்லை!” என்பார்**
**இப்பொழுதோ, இல்லை.**

- மஹாகவி

'மலர்ந்த யௌவனம்' எனும் நூலை எல்லாப் பாடசாலைகளுக்கும் வழங்கியிருந்தோம். ஆனால் இந்நூல் பெரும்பாலான பாடசாலைகளில் புத்தக அலுமாரியை அலங்கரித்ததே தவிர, மாணவர்கள் வாசிப்பதற்கு ஊக்குவிக்கப் படவில்லை. நாம் இது சம்பந்தமான விழிப்புணர்வு செய்ய பாடசாலை சென்றால் ஆசிரியர்கள் அனுமதி தருவதில்லை'' என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

உண்மைதான், இன்னுமே எமது சமுதாயம் பாலியல் கல்வியைப் பேசாப்பொருளாகவே பார்க்கிறது. இதன் விளைவுகளே இன்றைய அவல நிலைக்கு அதிக காரணம் எனலாம்.

தற்போது வளர்ந்துள்ள தகவல் தொடர்பாடல் வசதிகளின் மூலம் பாலியல் தொடர்பான விடயங்களைத் தெரிந்துகொள்வதை யாராலும் தடுக்க முடியாது. பாலியல் தொடர்பான முறையான அறிவைப் பெற்றிருந்தால் தவறான வழிக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளலாம். இதற்குப் பெற்றோரும், ஆசிரியரக்ளும் முன்வரவேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக தாதிய-சகோதரி கூறும் பின்வரும் அறிவுரையை இளைய சமுதாயத்தினர், குறிப்பாகப் பெண்கள் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

பெற்றோரின் சம்மதத்துடன் உறவுகளின் உற்சவமான திருமணத்தில், உலகத்தின் வாழ்த்தோடு

யாராவது ஆணுடன் நட்பு ஏற்படுமாயின் அந்த ஆண் பற்றிய தகவல்களை உங்கள் நண்பிக்கோ, சகோதரிக்கோ அல்லது பெற்றோரிடமோ சொல்லுங்கள். அத்துடன் உங்கள் தனிப்பட்ட எந்தச் சந்தேகத்தையும் உங்கள் பாடசாலையில் உளவளத்துணை ஆசிரியரோடு அல்லது உங்கள் பிரதேசத்தில் உள்ள குடும்ப நல தாதிய சகோதரியிடமோ தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். தனிப்பட்ட எந்த விடயமானாலும் இரகசியம் பேணப்படுவது உறுதி''

முகம் தெரியாத நபரின் தொலைபேசி அழைப்பை நம்பி தனியிடத்துக்குச் செல்லக்கூடாது. உங்களைப் பாதுகாத்துக் கொள்கின்ற முழுப்பொறுப்பும் உங்களிடமே உள்ளது.

தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்தில் உடலுறவில் ஈடுபட்டிருப்பின், நடந்து 72 மணித்தியாலத்துக்குள் அருகிலுள்ள வைத்திய அதிகாரப் பணிமனையையோ அல்லது உங்கள் பிரதேசத்திலுள்ள PHM, PHI ஆகியோரிடமோ தெரிவித்து, அதற்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இணைந்து உரிய காலத்தில் வாழ்க்கையை ஆரம்பியுங்கள். வளமான, மகிழ்ச்சியான வாழ்வு உங்களைத் தேடிவரும்! ●


**- வெ.சிவராமி**



fabulous ARTS

# ஆய கலைகள்

நடனம், நாடகம், இசைக் கருவிகள் வாசித்தல், பாடல், சொற்பொழிவு, கவிதை, ஓவியம், சிற்பம்... என்று நீண்டு செல்லும் கலைகள், ஆழ்ந்த கற்பனை, உணர்ச்சிகளின் வெளிப்பாடு ஆகியவற்றைக் கொண்டு,



பார்க்கின்றவர்களின் எண்ணங்களைத் தன்வயப்படுத்திக்கொள்ளும் சிறப்பு வாய்ந்தவை.

இவற்றுள் எந்தக் கலையானாலும் சரி, கூர்ந்த கவனமும், மிகுந்த ஆர்வமும், தேர்ந்த நிதானமும் இருந்தால் போதும். இவற்றைப் பயில. ஆனால் சிறந்து விளங்க வேண்டுமெனில், இடையறாத பயிற்சி வேண்டும். இவையாவும் ஒன்றிசைந்தால் மட்டுமே, தனிச்சிறப்பு மிக்கவர்களாக, சாதனையாளர்களாக விளங்க முடியும்.

அதேசமயம், மனதை இலகுவாக்கிக் கொள்ளவும் உதவக்கூடியதுடன் உற்சாகத்தையும் கொடுக்கவல்லது கலை!


எண்ணங்களில் மென்மை, இரசனை, கற்பனை என்று வளர்க்கும் வசீகரம் கலையின் தனிச்சிறப்பு!

அதில் ஈடுபடுவதனால், நம்முடைய இயல்பில் மென்மையும் மேன்மையும் உண்டாகும் என்பது பலரின் அனுபவம்!

ஏதேனும் ஒரு 'கலை'யைக் கற்றுக்கொள்ளுங்கள்!

அது நம் களைப்பைப் போக்கும்!!

களிப்பூட்டும்!!!



# சான்றிதழ் மட்டும் போதுமா?

யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பல்வேறு துறைகளிலும் கல்வி கற்று டிப்ளோமா சான்றிதழ்களை வைத்திருக்கின்றபோதும், அந்தச் சான்றிதழ்களுக்குரிய தகைமைகளைச் செயன்முறையில் காட்டமுடியாதவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார் தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான டி.எம். ஏ.குலசூரிய.

“தாம் படித்த பாடங்களில் அவர்கள் டிப்ளோமா சான்றிதழ்களைக் கொண்டிருந்தாலும், வகுப்பறையில் கற்ற விடயங்களைச் செயற்படுத்தத் தெரியாதவர்களாக இருக்கின்றனர்” என்கிறார் அவர்.

தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் யாழ் கிளைக்கான பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்காக, ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களுக்கான பரீட்சை ஒன்றை நடத்தியபோது இதைத் தம்மால் கண்டுகொள்ளக்கூடியதாக இருந்தது என்றும் அவர் கூறுகிறார்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவருமே தாம் படித்தவற்றை நடைமுறையில் பயன்படுத்தத் தெரியாதவர்களாக இருந்ததாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

என்னதான் படித்து அறிவு பெற்றிருந்தாலும், அதனைப் பயன்படுத்தத் தெரியாவிட்டால் அந்த அறிவினால் எந்தப் பயனுமில்லை என்று கூறும் அவர், “சான்றிதழ் வைத்திருக்கும் எவரும், தாம் பெற்றிருக்கும் சான்றிதழுக்கான முழுமையான தகைமையைக் காட்டக்கூடியவராக இருப்பது அவசியம்” என்று வலியுறுததுகிறார்.

வட பகுதி இளைஞர்களின் கல்வித் தகைமைகள் பற்றிய இவரது இந்த மதிப்பீடு வெறுமனே சான்றிதழ்களுக்குள் அறிவை மட்டுப்படுத்திவிடும் எமது கல்வி முறையின் பலவீனத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. எடுத்ததற்கெல்லாம் ஏதாவது ஒரு கற்கைநெறியைத் தொடர்வது, அதில் சான்றிதழ் பெற்று வைத்திருப்பது என்ற எமது கல்வி முறையால் இனிமேல் ஆகப்போவது எதுவுமில்லை என்பதை இவரது கூற்று தெளிவாகக் காட்டுகிறது.

போர்க்காலத்தில் வெளியுலகத் தொடர்புகளிலிருந்து பெருமளவுக்குத் துண்டிக்கப்பட்டு மூடுண்டிருந்த சூழலில், பல்கலைக்கழகக் கல்வி, அரசாங்க உத்தியோகம் என்ற குறுகிய வரையறைக்குள் மட்டும் நாம் செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்டோம். பல்கலைக்கழகக் கல்வி கிடைக்காதபோது மீண்டும் மீண்டும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவது, பொருத்தமில்லாத ஏராளம் கற்கைநெறிகளைத் தொடர்ந்து பணத்தையும், நேரத்தையும் விரயமாக்குவது என்று எமது காலத்தை நாம் தொலைத்துவிட்டோம்.

இன்றைய நவீன உலகில் வெறும் சான்றிதழ்களுக்கு எந்த மதிப்பும் கிடையாது. இப்போதெல்லாம் சான்றிதழ்களைவிட உங்கள் செயற்றிறனையே தொழில் தருநர்கள் பிரதமானமாகப் பார்க்கிறார்கள்.

எனவே, எந்தவொரு பாடநெறியைப் பின்பற்றுவதாக இருந்தாலும்,

**1.** கல்வி மற்றும் தொழில் தொடர்பான உங்களது இலட்சிய இலக்கு.


**2.** இயல்பாகவே உங்களுக்கிருக்கும் திறன்கள்.

**3.** தொழிற்சந்தையில் குறிப்பிட்ட துறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இருக்கக்கூடிய போதிய வருமானத்துடன் கூடிய தொழில்வாய்ப்புக்கள்

என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே அதனைத் தெரிவுசெய்யவேண்டும். அவ்வாறு தெரிவுசெய்யும் கற்கைநெறி சார்ந்த திறன்களை உச்ச அளவில் பெற்றுக்கொள்ளவேண்டும்.


அதைவிடுத்து, சும்மா ஆவலாதிப்பட்டு அறுபத்தெட்டுக் கற்கைநெறிகளைத் தொடர்ந்து சான்றிதழ்களை அடுக்கி வைத்திருப்பதால் எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை. ●

**- கோ. ருஷாங்கன்**



## ஆயிரம் வாசல்

யாழ்ப்பாத்திலும், இலங்கையின் ஏனைய பாகங்களிலும், இன்னும் உலகெங்கிலும் இருக்கும் சிறந்த, தொழில் உத்தரவாதமான கல்வி வாய்ப்புக்களுக்கான வாசல்களைக் காட்டுவதே 'ஆயிரம் வாசல்'. இம்முறை நாம் திறந்து காட்டும் வாசல், யாழ்ப்பாணத்தில் இருக்கும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் (**JATI – Jaffna Advanced Technical Institute**) தொழில் உத்தரவாதமான கற்கைநெறிகளாகும்.



# யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தொழில் உத்தரவாதமான கற்கைநெறிகள்

க.பொ.த. உயர்தரம் வரை படித்துவிட்டு பல்கலைக்கழகம் கிடைக்கவில்லை என்ற கவலை தேவையில்லை. க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடச் சித்தியுடன் தொழில் உத்தரவாதமான கற்கைநெறிகளை இங்கே தொடர்ந்து விரைவில் நல்ல வருமானத்துடன் தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

இல.665/5, கடற்கரை வீதியிலுள்ள இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் (SLIATE) யாழ்ப்பாணப்பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடத்துக்குமான விண்ணப்பங்கள், வர்த்தமானியில் ஐப்பசி மாதமளவில் பிரசுரிக்கப்பட்டு மாணவர்கள் உள்வாங்கப்படுகிறார்கள். பொதுவாக அனைத்துக் கற்கைநெறிகளுக்குமே கா.பொ.த உயர்தரத்தில் 3பாடச் சித்தி அவசியமாகும்.

இந்த நிறுவனத்தினூடாக நீங்கள் பயிலும் ஒவ்வொரு துறைக்கும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட(சாதாரண சித்தி) வர்த்தகப் பட்டப்படிப்புக்குச் சமனான கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இந்த நிறுனத்தினூடாக தொடரக்கூடிய சில பிரதான கற்கைநெறிகள்:

**1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா**

முழுநேரம் பகுதிநேரம் என 2 பிரிவுகளாகக் கற்பிக்கப்படும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பதாரிகள் கா.பொ.த உயர்தரத்தில் தூயகணிதம் அல்லது கணக்கியலில் திறமைச் சித்தியடைந்திருத்தல் அவசியமாகும். அல்லது இவற்றில் ஒரு பாடத்தில் கா.பொ.த. உயர்தரத்தில் திறமைச்சித்தி பெற்றிருப்பதுடன் மற்றைய பாடத்தில் க.பொ.த. சாதாரணதரத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் அவசியமாகும்.

**இக்கற்கைநெறியின் கீழ் கற்பிக்கப்படும் துறைகள்:**

(i) கணினி அடிப்படையிலான கணக்கியல்

(ii) நிதி முகாமைத்துவம்


(iii) தரவுகள் அடிப்படையிலான முகாமைத்துவம்

(iv) உயர் மட்ட நிதி அறிக்கையிடல்

(v)வரி விதிப்பு

**2. தேசிய உயர் முகாமைத்துவ டிப்ளோமா**

பகல் முழுநேரக் கற்கைநெறியான இதற்கு கா.பொ.த. உயர்தரத்தில் 3 பாடச் சித்தியுடன், சாதாரணதரத்தில் ஆங்கிலம் கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியமாகும்.



**இதன் கீழ் கற்பிக்கப்படும் துறைகள்:**

(i) மனிதவள முகாமைத்துவம்

(ii) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்

(iii) கணினியியல்

(iv) திட்டமுகாமைத்துவம்

### 3. தேசிய உயர் வியாபார நிர்வாக டிப்ளோமா

பகல் முழுநேரக் கற்கைநெறியான இதற்கு கா.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பொருளியல், வர்த்தகமும் நிதியும், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டில் சித்தியடைந்திருப்பதுடன், சாதாரணதரத்தில் ஆங்கிலம், கணிதம் ஆகியவற்றில் சித்தியடைந்திருத்தல் அவசியமாகும்.

**இதன்கீழ் வரும் பிரதான துறைகளாவன:**

(i) முகாமைத்துவ நடைமுறை

(ii) வியாபாரச் சட்டம்

(iii) முகாமைத்துவக் கணக்கியல்

(iv) திட்ட முகாமைத்துவம்

(v) மனிதவள முகாமைத்துவம்

(vi) வங்கி மற்றும் காப்புறுதி

(vii) வியாபாரத்துக்கான கணினிப் பிரயோகம்

### 4. உயர் தேசிய வியாபாரத் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா

விண்ணப்பதாரிகள் கா.பொ.த உயர்தரத்தில் ஒரே தடவையில் பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம், தூயகணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக 3பாடங்களில் சித்தியடைந் திருக்கவேண்டும்.

**இதன்கீழ் வரும் பிரதான துறைகளாவன:**

(i) இணையத்தளம் அமைத்தல்

(ii) வலைப்பின்னல் பிரயோகம்

(iii) தரவுகள் அடிப்படையிலான நிர்வாகம்

(iv) மென்பொருள் தர உறுதி

(v) முறைமை அமைப்பு

### 5. தேசிய உயர் ஆங்கில டிப்ளோமா

முழுநேரம் அல்லது பகுதிநேரமாகக் கற்பிக்கப்படும் இக்கற்கைநெறிக்கு கா.பொ.த. உயர்தரத்தில் ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தியுடன், 3 பாடங்களில் சித்தி அல்லது பொது ஆங்கிலத்தில் சித்தியுடன் 3பாடங்களிலும் சித்தியடைந்திருக்கவேண்டும்.

**இதன் கீழ் கற்பிக்கப்படும் துறைகள்:**

(i) ஆங்கில இலக்கியம்

(ii) மொழிபெயர்ப்பு

(iii) வியாபார ஆங்கிலம்

(iv) ஊடகத்துறை

(v) போதன நடைமுறை

### 6. தேசிய உயர் வர்த்தகக் கல்வி டிப்ளோமா

பகல் முழுநேரக் கற்கைநெறியான இதற்கு கா.பொ.த. உயர்தரத்தில் பொருளியல், வியாபாரக்கல்வி மற்றும் கணக்கியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியமாகும்.

**இதன் கீழ் கற்பிக்கப்படும் துறைகள்:**

(i) நிதிக் கணக்கியல்

(ii) வியாபாரச் சட்டம்

(iii) தகவல் தொழில்நுட்பம்

(iv) தந்திரோபாய முகாமைத்துவம்

(v) விலை மற்றும் முகாமைத்துவ கணக்கியல்

(vi) வியாபாரத்துக்கான கணினி பிரயோகம்

இந்நிறுவனத்தில் விரிவுரைகள், பகல் முழுநேரக் கற்கைகள் கிழமை நாட்களில் பகல் நேரங்களிலும், பகுதிநேரக் கற்கைகள் வார இறுதி நாட்களில் பகலிலும் நடாத்தப்படும்.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளிலேயே கற்கைநெறிகள் நடத்தப்படுகின்றன.

பகல்நேரப் பாடநெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படாது என்றபோதும், பகுதிநேரக் கற்கைநெறிகளுக்கு ஒவ்வொரு கற்கைநெறிக்கும் ரூ.2,000 - ரூ.10,000 வரையில் கட்டணம் அறவிடப்படுகிறது.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் தேர்வானோர் எழுத்து-மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னரே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

குறிப்பாக கா.பொ.த. உயர்தரத்தில் பெற்றுக்கொண்ட Z புள்ளியின் அடிப்படையிலேயே மாணவர்கள் உள்வாங்கப்படுவர். பகல் நேரக் கற்கைநெறிக்கு 22 வயதுக்கு கீழ்ப்பட்டோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**தொ.பே: 021 222 2595**



**- ச.தர்ஷா**

**2ம் அணி**


# அறிவு தரும் உணவுகள்!

நாம் சாப்பிடும் உணவில் ஐந்து வகைச் சத்துகள் உள்ளன. அவை கார்போஹைதரேட், புரதம், கொழுப்பு, விட்டமின்கள் மற்றும் தாதுச் சத்துகள். நம் தினசரி உணவில் இந்த ஐந்தும் தேவையான அளவில் இடம்பெற வேண்டும்.

அப்போதுதான் உடலின் வளர்ச்சி சீராக இருப்பதுடன் உடல் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

**ஐந்து வகைச் சத்துகள்**

உடலுக்குச் சக்தியைத் தருபவை கார்போஹைதரேட்டுகள். இவை அரிசி, கோதுமை, சோளம் போன்ற தானியங்களிலும், உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, வத்தகக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளிலும் உள்ளன.



உடலின் வளர்ச்சிக்கு உதவுபவை புரத உணவுகள். இவை பால், தயிர், பாலாடை, பருப்பு, பட்டாணி, முந்திரி, பாதாம் பருப்பு, தேங்காய், முட்டை, மீன், இறைச்சி முதலியவற்றில் உள்ளன.

உடலுக்குச் சக்தி தருவதோடு மட்டுமில்லாமல், தோலுக்கு அழகு சேர்ப்பது, ஹார்மோன்களை உற்பத்தி செய்வது போன்ற முக்கிய பணிகளையும் செய்பவை கொழுப்பு உணவுகள். நெய், வெண்ணெய், பட்டர், எண்ணெய்கள், முட்டையின் மஞ்சள் கரு, கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி போன்றவற்றில் கொழுப்பு அதிகம்.

உடலுக்குப் பாதுகாப்பு அளிப்பவை விட்டமின்கள். இவை காய்கறிகள், பழங்கள், கீரைகள் ஆகியவற்றில் உள்ளன. இறுதியாக வருபவை தாதுச் சத்துகள். கல்சியம், சோடியம், பொட்டாஷியம், அயோடின், இரும்புச் சத்து, பொஸ்பரஸ், சல்ஃபர், மக்னீசியம் போன்றவை தாதுச் சத்துகள். இவை மிகக் குறைந்த அளவில்தான் நமக்குத் தேவைப்படுகின்றன. என்றாலும், இவை மிகவும் இன்றியமையாதவை.

**அறிவு தரும் அயோடின்**

உயிரணுக்களின் வளர்ச்சி சரியாக இருப்பதற் கும், உணவுகளின் வளர்ச்சிதை மாற்றப் பணிகள் சீராக நடைபெறவும், மூளை வளர்ச்சி வயதுக்கேற்ப அமையவும் அயோடின் அவசியம். குறிப்பாக, குழந்தைகள் உடலில் அயோடின் சத்து சரியான அளவில் இருக்க வேண்டும். குறைந்தால், உடல் எடை கூடும். முகம் வீங்கும். குழந்தை எந்நேரமும் மந்தமாக இருக்கும். படிப்பில் கவனம் செலுத்த முடியாது. படித்தது மறந்துவிடும். விளையாடக்கூட ஆர்வம் இருக்காது. மூளை வளர்ச்சி குறையும் (உங்களுக்கு இப்படியெல்லாம் இருந்தால் உடனே வைத்தியரை நாடுங்கள்).

**தைரொய்ட்**

கழுத்தில் முன் பகுதியில் உள்ள ‘தைரொய்ட்’ எனும் நாளமில்லாச் சுரப்பியில் ‘தைரொக்சின்’ எனும் ஹார்மோனைச் சுரக்க அயோடின் தேவை. இல்லையென்றால் கழுத்துப் பகுதியில் ஒரு வீக்கம் தோன்றும். இதற்கு ‘முன் கழுத்துக் கழலை’ என்று பெயர். இந்த நோய் உள்ள பெண் குழந்தைகள் பருவமடைவதில் சிக்கல் உண்டாகும்.


**அயோடின் மிகுந்த உணவுகள்**

இறால், நெத்தலி, சிறிய மீன் வகைகள் உள்ளிட்ட எல்லா வகைக் கடல் உணவுகளிலும் அயோடின் சத்து உள்ளது. அதுபோல், பெரும்பாலான கீரைகளிலும், அன்னாசிப்பழம், பேரிக்காய், ஒரேஞ்ச், வெள்ளைப் பூண்டு போன்றவற்றிலும் அயோடின் அதிகம். இவற்றை அடிக்கடி உட்கொண்டால் அயோடின் பற்றாக்குறை ஏற்படாது.

சமையலின்போது சேர்க்கப்படும் உப்பில் அயோடின் கலக்கப்படுவதால், இதைப் பயன்படுத்தினாலும் அயோடின் பற்றாக்குறை ஏற்படாது.

**சோர்வைப் போக்கும் சோடியம்**

மற்றொரு தாதுச்சத்து சோடியம். உடலில் தண்ணீரின் அளவைக் கட்டுப்படுத்துவது, இரத்தத்தின் கார - அமிலத் தன்மையைச் சரி செய்வது, சிறுநீரகச் செயல்பாட்டைச் சரியாக வைத்துக் கொள்வது, இரத்த அழுத்தத்தை



முறைப்படுத்துவது, தசைகளின் இயக்கத்துக்கு உதவுவது, மூளை சோர்வில்லாமல் உழைப்பதற்கு உதவுவது போன்ற பணிகளைச் செய்வது சோடியம்தான். இது குறைந்தால் அடிக்கடி தலைவலி வரும். காரணமில்லாமல் வாந்தி வரும். தசைப் பிடிப்பு உண்டாகும். விரல்கள் இழுத்துக் கொள்ளும். எந்நேரமும் உடல் சோர்வாக இருக்கும்.

**சோடியம் மிகுந்த உணவுகள்**

இதுவும் சமையல் உப்பில் உள்ளது. குடிதண்ணீரில் உள்ளது. முட்டை, பால், மோர், தயிர், கரட், பீட்ரூட், கீரைகள், பழங்கள், பச்சைப்பயறு, துவரை, கொண்டைக்கடலை, வாழைப்பழம் போன்றவற்றிலும் சோடியம் அதிகம்.

தினமும் மூன்று லீட்டருக்குக் குறையாமல் தண்ணீர் குடித்தாலே நமக்குத் தேவையான சோடியம் கிடைத்துவிடும். உடலில் சோர்வு இருக்காது. மூளை உற்சாகமாகச் செயல்படும்.

**தெளிவான சிந்தனைக்கு...**

மூளைக்குத் தொடர்ச்சியாக ஒக்ஸிஜனை அனுப்பி, நம்மைத் தெளிவாகச் சிந்திக்க வைப்பது பொட்டாஷியம்தான். இது இளநீரில் அதிகம். பசலைக் கீரை, உலர்ந்த பழங்கள், தோடம்பழம், அன்னாசி, வாழைப்பழம், தக்காளி, தர்ப்பூசணி போன்றவற்றில் இது மிகுந்துள்ளது. தினமும் இரண்டு இளநீர் சாப்பிட்டு வர சிந்தனை தெளிவாக இருக்கும். ●

**டாக்டர் கு. கணேசன்**

**நன்றி: கோகுலம்**




சிகரம் | Dan தமிழ் ஒளி | www.JAFFNATODAY.com

ஆகிய ஊடகங்களில் நேரடி
செய்முறைப்பயிற்சியுடன்
யாழ் மண்ணில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற

# ஊடகக் கற்கைகள்

**அச்சு ஊடகவியல்**

செய்தி சேகரிப்பு, எழுதுதல், நேர்காணல், சித்திரிப்பு

Computer Lab
Audio - Video Studio

**வானொலி ஊடகவியல்**

அறிவிப்புக்கலை, எழுத்துருவாக்கம், நிகழ்ச்சித் தயாரிப்பு, Editing

**தொலைக்காட்சி ஊடகவியல்**

வீடியோ படப்பிடிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு, எழுத்துருவாக்கம், Editing

**கணினி, இணையப் பயிற்சி**

Microsoft Office, Internet, Email, Social Media etc.

**ஒளிப்படக்கலை (Photography)**

SLR, Digital Camera Techniques
Photo Editing, Studio Lab Training

**Graphic Designing**

பக்க வடிவமைப்பு, மடல்கள், விளம்பர வடிவமைப்பு, வரைகலை
PAGE MAKER, PHOTOSHOP, INDESIGN

**சந்தைப்படுத்தல் (Marketing)**

தொடர்பாடல் திறன் விருத்தி, விற்பனை நுட்பங்கள், விளம்பரக்கலை

**தொடர்பாடலுக்கான ஆங்கிலம்**

சொற்களஞ்சிய விருத்தி, வாசிப்பு, வசன அமைப்பு, பேச்சுத்திறன், எழுத்து

3மாத
கற்கைநெறி
+
3மாத
பணியிடப் பயிற்சி
=
பயிற்சிநெறி முடிவில்
தொழில் உத்தரவாதம்

10 வருட அச்சு, வானொலி, தொலைக்காட்சி, இணைய ஊடக அனுபவத்துடன், சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரே ஊடகப் பயிற்றுவிப்பாளர் கோ. ருஷாங்கன் தலைமையிலான அனுபவமிக்க ஆசிரியர் குழாம்



**சிகரம் ஊடக இல்லம்**

MEDIA

இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், தொ.பே.: 021 300 80 60,
நேரடி: 077 77 33 931, மின்னஞ்சல்: SikaramMedia@gmail.com

# தமிழ் பேசிய அம்பு



மன்மதன் அம்பு படத்தின் நாயகி 'அம்பு', இளைஞர்களின் கனவுக்கன்னி த்ரிஷா! சொந்தக்குரலில் டப்பிங் பேசியதுடன் ஒரு பாடலையும் பாடி அசத்தியுள்ளார்.

'கண்ணோடு கண்ணைக் கலந்தாள் என்றால்...' என்ற இந்தப் பாடல் திரைப்படத்தில் வரவில்லை என்றாலும், பாடல் இசைப்பேழையில் இரசிகர்கள் அதைக் கேட்கலாம்.

"தமிழ்ல டப்பிங் பேசறதுக்கே தயங்கிய நான், ஒரு பாட்டு அதுவும் செந்தமிழில் பாடுவேன்னு நினைக்கவே இல்லை'' என்று சிலிர்க்கும் அவர், "இந்தப் படம் லைவ் சவுண்ட்ல எடுக்கப்பட்டதால நான் சொந்தக் குரல்ல பேசவேண்டியதாச்சு. நிறைய ஒத்திகைகள் நடந்ததால சமாளிச்சுட்டேன்'' என்று பெருமைப்படுகிறார்.

உண்மைதான்! லேசா லேசா மூலமாக தமிழ்சினிமாவில் அறிமுகமான த்ரிஷாவின் நீண்ட நாள் ஆசை நிறைவேறியுள்ளதே!

எந்தத் திரைப்படத்தையும் அது தொடங்கிப் பத்து நிமிடங்களுக்குள் பார்வையாளன் ஏற்பான் அல்லது மறுப்பான் என்னும் பொதுவிதியைப் புறந்தள்ளி திரைக்கு வந்திருக்கிறது 'மைனா'.

படிப்பு வராததால் இளம் வயதிலேயே வேலைக்குப் போகும் நாயகன் விதார்த் (சுருளி), ஆதரவற்றிருந்த நாயகி அமலாவுக்கும் (மைனா), அவருடைய அம்மாவுக்கும் அடைக்கலம் தேடிக் கொடுக்கிறார்.

இளம் வயதிலிருந்தே ஒன்றாக வளரும் இவர்களுக்கிடையே வழக்கம்போல் காதல் வந்துவிடுகிறது. ஆனால், அமலாவை அவருடைய அம்மா வேறு ஒருவருக்குத் திருமணம் செய்துவைக்க முனைய, அதனால் ஏற்பட்ட அடியுதையால் விதார்த் ஜெயிலுக்குப் போகிறார்.

அங்கிருந்து தப்பிவரும் அவரை, பல மலைகளுக்கு அப்பாலிருக்கும் அவருடைய சொந்த ஊரில் வீடு தேடி வந்து இழுத்துச் செல்கிறார்கள் சிறைக்காவல் அதிகாரியான பாஸ்கரும்(சேது), சிறைச்சாலை உதவியாளர் ராமையா(தம்பி ராமையா)வும்.

சுருளியையும், அமலாவையும் கூட்டிக்கொண்டு காடுகளுக்கூடாகப் பயணம் போகும் இரண்டு பொலிஸ்காரருக்கும் இவர்களுக்குமான முரண்பாடுகள், ஒரு கட்டத்தில் பொலிஸ்காரரின் கொடூர முகத்தைக் காட்டுகிறது.

திடீரென இவர்கள் பயணித்த பஸ் விபத்தில் சிக்கும்போது, சுருளியே பொலிஸ்காரர்களின் உயிரைக் காப்பாற்றிவிட, காக்கிச்சட்டைக்குள்ளேயும் இருக்கும் மனிதநேயம் வெளிப்பட்டு மீதிப் படத்தை நகர்த்துகிறது.


பித்துப்பிடித்தவர்கள் போன்ற சுருளி-அமலா ஜோடியின் காதல் பயணத்தின் இறுதியில் அனைத்தும் கைகூடிவரும்போது ஏற்படும் முடிவுதான் மைனாவின் முற்றுப்புள்ளி!

திரைப்படத்தின் நாயகன் விதார்த் (சுருளி) எனினும், சிறைச்சாலை அதிகாரியான சேது (பாஸ்கர்)வே கதைக்கு நாயகனாகிறார்.. சிறைக்காவலரான தம்பி ராமையா, காமெடி, குணச்சித்திரம் என இரண்டிலுமே கலக்கியுள்ளார்.

காடும் காடு சார்ந்த இடத்தையும் கதைக்களமாக்கி. காதலுக்காக காட்டுமிராண்டித்தனமாக போராடும் இளைஞனின் வாழ்க்கையை இலாவகமான திரைக்கதையின் மூலம் சொல்லியிருக்கிறார் இயக்குநர் பிரபு சொலமன்.


பல நூறு கோடியில் உருவாக்கி, கிரா:.பிக்ஸ்சில் மலைக்க வைத்த படங்களைவிட, வெறும் காட்டுக்குள், தீபாவளிக்கு முதல்நாளிலிருந்து அடுத்த நாள்வரையான கதையைச் சொன்ன மைனா - திரையரங்குகளுடன் இரசிகர்களின் மனங்களையும் நிறைத்திருக்கிறது.

# 'மைனா' சுருளியின் உயிர்!



# கணினி-நீ

**எதிர்கால இலட்சியத்தை - அதற்கான கல்வியை**




'என்னதான் இணையத்தளங்களைப் பார்த்தாலும், கையில் பத்திரிகையை வைத்துப் பார்ப்பதுபோல் வருமா?' என்று சொல்பவர்களுக்காக புதிதாக வருகிறது வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள இலத்திரனியல் பத்திரிகை (Flexible electronic newspaper). கையில் பத்திரிகை வைத்துப் பார்ப்பதுபோன்றே பயன்படுத்தக்கூடிய இந்தப் புதிய இலத்திரனியல் பத்திரிகையில் நாளாந்தப் பத்திரிகைகள் இணையத்தினூடாக தரவேற்றம் செய்யப்படும். ஒருமுறை இந்த இலத்திரனியல் பத்திரிகையை வாங்கிவிட்டால் போதும், தினமும் அன்றைய பத்திரிகையை வீட்டிலிருந்தே இதன்மூலம் பார்க்க முடியும்.

மேசைக் கணினி, மடிக் கணினி, கையடக்கக் கணினி என்று கணினிகளின் வளர்ச்சியில், முற்றிலும் ஊடுபார்க்கக்கூடிய கண்ணாடி போன்ற இழையிலான கணினிகள் விரைவில் சந்தைக்கு வரவிருக்கின்றன. CPU, Monitor, Keyboard, Mouse என்று தனித்தனி பாகங்களின் தேவையின்றி இந்தக் கணினியை முற்றிலும் தொடுதிரைத் தொழில்நுட்பத்தின் மூலம் பயன்படுத்த முடியும். இன்னும் என்னென்ன புரட்சிகளைச் செய்யப்போகிறார்களோ...?

**தகவல் தொழில்நுட்ப இணைப்பிதழ்**



# கணினி அறிமுகமும் அடிப்படைக்கட்டமைப்பும்


கடந்த இதழில் உள்ளீட்டுக் கருவிகளைப் பற்றி விரிவாக பார்த்தோம். இந்தப் பகுதியில் வெளியீட்டுக் கருவிகள் பற்றிக் காணலாம்.

## வெளியீட்டுக் கருவிகள்:

கணினியில் நாம் கொடுக்கும் உள்ளீடுகளுக்கு ஏற்ப செயல்பட்டு அவற்றிற்கான வெளிப்பாட்டினைத் தருபவை வெளியீட்டுக் கருவிகளாகும். முக்கியமாக நாம் தெரிந்துகொள்ளவேண்டிய வெளியீட்டுக் கருவிகள் பற்றி இந்தப் பகுதியில் பார்க்கலாம்.

**கணினித்திரை (Monitor):**

இது கணினியின் பிரதான வெளியீட்டுக் கருவியாகும். கணினியில் நாம் செய்யும் எந்தவொரு வேலையையும்




நேரடியாக கணினித்திரையே எமக்குக் காண்பிக்கிறது. உதாரணமாக, நாம் கணினியில் தட்டச்சு செய்வதை கூறலாம். இது தனி ஒரு வர்ணத்திலும் (Mono Chrome), மூன்று வர்ணத்திலும் (RGB) தயாரிக்கப்படுகிறது. ஒரு சில விடையங்களைத் தவிர, வீடுகளில் பயன்படுத்தப்படும் தொலைக்காட்சி போன்றே இதன் செயல்பாடு இருக்கும். கணினித்திரை இன்று LCD,Plasma, LED, LED 3D என பல வகைகளில் சந்தைக்கு வருகின்றன. இவை நிறம் மற்றும் செயல்பாடுகளில் அதற்கான தனிச்சிறப்பு உடையன.



**Printer (பிறின்டர்):**


கணினியில் தட்டச்சு அல்லது ஒளிப்பட வேலைகள் செய்த பின் அதனை ஒரு தாளில் அச்சிடுவதற்கு பயன்படும் கருவி Printer. இது பெருமளவில் கணினியுடன் பயன்படுத்தப்படும் ஒரு துணைக்கருவியாகும். இது Impact Printer, Dot Matrix Printer, Laser Printer, Daisywheel Printer, Thermal Printer, inkject Printer ஆகியன இதன் சில வகைகளாகும்.

**Projector (புறொஜெக்டர்):**



இந்தக் கருவியானது கணினித்திரையில் காணப்படும் வெளியீட்டினை சமதளமான பெரிய திரையில் வெளியீடாகக் காட்ட உதவுகிறது. இதன்மூலம் ஒரு கூடத்திலுள்ள பலரும் விரிந்த திரையொன்றில் கணினித்திரையில் உள்ளவற்றைத் தெளிவாக காண இயலும்.

**Sound Card (சவுண்ட் காட்):**




இது கணினியில் ஸ்பீக்கர் மூலமாகவோ அல்லது ஹெட் ஃபோன் மூலமாகவோ இசையைக் கேட்டு இரசிப்பதற்குத் தேவைப்படும் கருவியாகும். அருகிலுள்ள ஒளிப்படமானது Sound Cardன் வடிவத்தைக் காட்டுகிறது.

**Video Adapter (வீடியோ காட்):**



இது கணினியில் உள்ளே இணைக்கப்பட்டுள்ள வெளியீட்டுக் கருவியாகும். இதன் மூலம் கணினித்திரையில் அதிகூடிய வர்ணங்களுடன் துல்லியமான காட்சிகளை கண்டுகளிக்கலாம். இந்தக் கருவியில் மூன்று வித இணைப்புகள் காணப்படும். அவற்றுள் VGA Connector எனப்படுவது கணினித்திரைக்கும் S-Video மற்றும் DVI Connector ஆகிய இரண்டும் கணினியில் வீடியோ கமராவினை இணைத்து அதிலுள்ளவற்றை கணினித்திரையில் பார்க்கப் பயன்படுத்தப்படுகிறது.




**Robots (ரோபோ):**


இவை பொதுவாகக் கணினியால் கொடுக்கப்பட்ட உள்ளீடுகளின் அடிப்படையில் பணிபுரிகின்றன. இவை பெரும்பாலும் மனிதர்களைப் பயன்படுத்த முடியாத நுட்பமான மற்றும் ஆபத்தான வேலைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

**Voice (வொய்ஸ்):**

இது எதிரொளிர் திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு பேச்சுக்கான மாற்றியாக உள்ளது. இதன் மூலம் நாம் சரியான உச்சரிப்பைப் பெறலாம். மேலும், தானியக்க ஒலிச் செயல்பாடுகள் இயக்கமும் உள்ளது.




**Plotters (ப்ளொட்டர்):**



குறிப்பிட்ட அளவுகளை விட பெரிய அளவிலான தாள்கள் மற்றும் இன்னபிற அச்சுத் தேவைகளுக்குப் பயன்படுவது Plotter. இதில் உள்ள Ink பேனா மூலம் இது அச்சிடுகிறது. Flat Bed Plotter, Drum Plotter, Electrosstatic Plotter என்பன இதன் வகைகளாகும்.

**Speaker (ஸ்பீக்கர்):**

கணனியில் பாடல்கள் மற்றும் ஒலிக்கலவைகளின் வேறுபாடுகளை அறியவும் இசை சார்ந்த விடையங்களை வெளியிடுவதால் Speakerம் ஒரு வெயியீட்டுக் கருவியாகும். கணனியுடன் இணைக்கப்பட்ட Speaker டிஜிட்டல் வடிவத்தில் ஒலி வெளியீட்டினைத் தருகிறது.



**குறிப்பு:**

(i) Disk அனது Input Unitஆகவும், Output Unit ஆகவும் செயற்படுகிறது.


(ii) Central Processing Unit (CPU) உடன் அதற்கீடான வன்பொருளுடன் வெளியிணைப்பாக இணைக்கப்படும் கருவிகள் யாவும் (Peripharal Devices) எனவும் அழைக்கப்படுகின்றன.


அடுத்ததாக உள்ளீட்டுக் கருவிகளையும் வெளீயிட்டுக் கருவிகளையும் ஒன்றாக இணைத்துச் செயற்படுத்துவது மட்டுமல்லாமல் கணினி நினைவகங்களுக்கு வேண்டிய கட்டளைகளையும் பணிசெயல்முறையையும் (OS) கட்டுப்படுத்தும் மத்திய செயற்பாட்டுத் தொகுதியினைப் பற்றி அறிந்துகொள்வோம்.

# (III) Central Processing Unit

**(மத்திய செயற்பாட்டுத் தொகுதி)**

கணினி ஒன்றின் மூளை அல்லது இதயம் என இதை நாம் கொள்ளலாம். இது கணினியின் சகல






பாகங்களையும் கட்டுப்படுத்துவதுடன் கணித மற்றும் தர்க்கரீதியான தீர்வுகளையும் கணிக்கின்றது.

இதனுள் பல இலட்சம் மூவாஜிகள் (Transistors) அடுக்கப்பட்டிருப்பதுடன் தரவுகளை வேகமாகக் கையாள்வதற்-கென சிறிய நினைவகம் ஒன்றும் உண்டு. அந்நினை-வகம் காஸ் நினைவகம் (Cache memory 64KB - 128KB வரை) என அழைக்கப்படுகிறது.

பொதுவாக செயற்படுத்தி (Processor)களின் வேகம் Hz எனும் அலகிலேயே அளக்கப்படுகிறது. கணினிப்பரம்பரையின் அடிப்படையில் செயற்படுத்தியின் வேகம் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. கணினி ஒன்றின் இயல்பு தீர்மானிக்கப்படுவதற்கு Processorன் பங்கும் முக்கியமானதாகும்.

செயற்படுத்தி (Processor) யினுள் பிரதானமாக காணப்படும் இரு பகுதிகள்.

1. **Control Unit (C.U)**
2. **Arithmetic and Logical Unit (A.L.U)**




இதில் ALU ஆனது கணிதவியல் செயற்பாடுகளையும் நேரத்ததுக்கு ஏற்றாற்போல் முடிவெடுக்கும் வேலைகயையும் செய்கிறது. அதேபோல் CU ஆனது வன்பொருள் மற்றும் மென்பொருளில் இருந்து கொடுக்கப்படும் கட்டளைகளை உரிய இடத்திற்கு அனுப்புதல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்ற வேலைகளைச் செய்கிறது. இவற்றினை பற்றி அடுத்த இதழில் விரிவாகக் காண்போம். ●

**- சு.நேதாஜி**

# முகம் பார்த்துப் பேசலாம் வாங்க



கடிதத் தொடர்பு, தொலைபேசித் தொடர்பு எல்லாம் போய், இப்போது எங்கோ தொலைவில் இருப்பவர்களுடனும் 'முகம் பார்த்துப் பேசும்' வசதியும் வந்துவிட்டது. இணையமூடாக ஒலி- காணொளி அழைப்புக்களை ஏற்படுத்த உதவும் Skype மென்பொருள் இதற்குக் கைகொடுக்கிறது.

எந்தக் கட்டணமும் இன்றி வொய்ஸ் ஓவர் புரோட்டோகால் (VoIP) தொழில்நுட்பத்தின் உதவியுடன், கணினி, மொபைல் ஃபோன், கோர்ட்லெஸ் ஃபோன், வீடியோ ஃபோன் ஆகியவற்றின் மூலம் திரையில் ஒருவரை ஒருவர் பார்த்து உரையாட இது உதவுகிறது.

முதன் முதலாக தொலைக்காட்சி களிலும் இந்தத் தொழில்நுட்பம் இப்போது வந்து-விட்டது. இணையத் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய புதிய நவீன தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் இந்த வீடியோ அழைப்புகளை மேற்கொள்ளலாம்.

உங்களிடம் ஒரு கணினி, வேகமான இணையஇணைப்பு (ADSL/Broadband), ஒலிப்பானு-டன் கூடிய ஒலிவாங்கி, ஒரு வெப் கமரா(WebCam) இருந்தால், Skype இணையத்தளத்திலிருந்து இலவச மென்பொருளைத் தரவிறக்கம் செய்து இந்தச் சேவையைப் பயன்படுத்திக்-கொள்ளலாம்.

## Skype நிறுவுவது எப்படி?

www.skype.com என்ற இணையத்-தளத்துக்குச் சென்று, Download Skype Free எனும் இணைய இணைப்பை அழுத்துங்கள்.

விரியும் பக்கத்தில் Skype ஐ நிறுவுவ-தற்கான exe file ஐ தரவிறக்கம் செய்யுங்கள்.




அதை Double Click செய்து உங்கள் கணினியில் நிறுவிக்கொள்ளுங்கள்.

இப்போது ஸ்கைப்பை open செய்து Don't have a Skype name எனும் இணைப்பை அழுத்துங்கள்.

விரியும் பக்கத்திலுள்ள விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளித்து உங்களுக்கான ஸ்கைப் பெயர் (Skype Name) மற்றும் கடவுச்சொற்களைக் (Password) கொடுத்து கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

இதன்பின் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் link ஐ அழுத்தி Skype இல் உங்கள் பக்கத்திற்குள் நுழையலாம்.

உங்கள் பக்கத்திற்குள் நுழைந்ததும் Search Friends அல்லது Add new contact எனும் இணைப்பை அழுத்தி Skype தொடர்பில் இருக்கக்கூடிய உங்கள் நண்பர்களைத் தேடிப்-பிடிக்கலாம்.

இவர்களின் பெயர் அல்லது Skype name அல்லது மின்னஞ்-சல் முகவரியைக் கொடுத்து தேடலை மேற்கொள்ளலாம்.

முதன் முதலில் ஒரு நண்பரை இணைப்பதாயின் உங்கள் விபரங்களடங்கிய கோரிக்கை அவருக்கு அனுப்பப்பட்டு அவருடைய அனுமதியைப் பெற்ற பின்னரே உங்கள் நண்பரின் தொடர்புகள் உங்கள் கணக்கில் சேர்க்கப்படும்.




பச்சை நிறத்திலிருக்கும் Call பொத்தானை அழுத்தி skype இல் இணைந்துள்ளவர்களுடன் கதைக்கலாம். Video call ஐ அழுத்தினால் முகம் பார்த்துப் பேசலாம்.

### பயன்கள்:

- முகம்பார்த்து உரையாட முடியும் (Video Call)
- ஒளிப்படங்கள், சிறு காணொளிகள், கோப்புகள் என அனைத்தையும் அனுப்ப முடியும் (Send File)

Get Skype now




உங்களுடைய கணினியைத் தொடர்ச்சியாக ஒரு பிரச்சினையுமின்றி ஆரோக்கியமானதாக பேணுவதற்கு Backup, Defragmenting, Scan Disk or Error Checking என்பன அவசியமானது என்று கடந்த இதழில் பார்த்தோம். இம்முறை இவற்றை எவ்வாறு செய்யலாம் என்று தெரிந்துகொள்வோம்.

**Defragmenting**

கணினியைப் பாவிக்கப் பாவிக்க அதன் வேகம் குறைந்து செல்வதனை அவதானித்திருப்பீர்கள். கணினியிலுள்ள கோவைகள் (Files) ஒழுங்காக உரிய முறையில் அடுக்கி வைக்கப்படாமல் எங்கும் இலகுவாகப் பரவியிருப்பதே (Fragmented / Disperse) இதற்குக் காரணம்.

Hard Disk இல் காணப்படும் Cluster எனப்படும் சிறியளவிலான பல பகுதிகளிலேயே கோவைகள் சேமிக்கப்படுகின்றன. ஒரு Cluster இல் 4 Kilobytes அல்லது அதைவிட சற்று அதிகமான அளவு கொண்ட கோவைகளையே சேமித்து வைக்க முடியும். உங்களுடைய File System ஐப் பொறுத்து இதன் அளவு வேறுபடலாம்.

நீங்கள் Store பண்ணும் files இன் அளவு ஒரு Cluster ஐ விடப் பெரிதாகக் காணப்பட்டால், ஒரு கோப்பைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு நீண்ட நேரம் எடுக்கும். அடிக்கடி defrag செய்து கோப்புக்களை ஒழுங்காக அடுக்கிக்கொண்டால் இந்தப் பிரச்சினை இருக்காது. மாதத்துக்கு ஒருமுறையாவது defragment செய்துகொள்ளுங்கள்.

**1.** My Computer


**2.** Partition இலும், "Properties" இலும் Right Click செய்யுங்கள்.

**3.** Go to the tab, "Tools"?

**4.** இப்போது "Defragment Now" என்பதை க்ளிக் செய்து இயக்குங்கள் (Defragmentation முடிவதற்கு சிறிது நேரம் பிடிக்கும்).

**Scandisk or Error Checking**

மின்சாரம் துண்டிக்கப்படுதல் போன்ற உடனடித் தடங்கல்களால் கணினி இயக்கம் தடைப்படும்போது, நாம் செய்துகொண்டிருக்கும் வேலை பல



சமயங்களில் பாதிப்படைவதுண்டு, இவ்வாறான சந்தர்ப்பங்களில் மீண்டும் கணினியை இயக்கும்போது அது Scandisk ற்குச் செல்வதால் நீண்டநேர தாமதம் ஏற்படும்.

எனினும், ஒழுங்கற்ற முறையில் Shutdown செய்யப்பட்டமையால் கணினியில் ஏற்படக்கூடிய பிரச்சினையைத் தவிர்ப்பதற்கு Scandisk செய்வது நல்லதே. எதிர்காலத்தில் கணினி முற்றாக செயலிழந்து போவதைத் தவிர்த்துக்கொள்வதற்கு இது உதவும்.

கணினியை ஒழுங்கான முறையில் Shutdown செய்யாத ஒவ்வொரு தடவையும், அல்லது மூன்று வாரங்களுக்கு ஒருமுறை Scandisk செய்வது சிறப்பு ●

**- ஞா.கிரிசாந்**

---

● உடனடிச் செய்திகள், குறுஞ்செய்திகளை அனுப்ப முடியும் (Send IM & SMS)

● ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களிலுள்ளவர்களை ஒரே அழைப்பிலிருத்தி குழுவாக உரையாடலாம் (Group Conversation).

● உங்கள் கணினித் திரையில் காட்சியாகும் எதனையும் எதிரிணைப்பிலுள்-ளவர்க்கும் காட்ட முடியும். (Screen Sharing)




● இணைய விளையாட்டுக்களை விளையாட முடியும் (Online Games).

தற்போது வெளிவந்துள்ள Skype5 மென்பொருளில் குழுத்தொடர்பாட-லுக்கும் வீடியோ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வீட்டில் நடக்கும் கொண்டாட்டங்களை தூர இடத்தில் இருப்பவர்கள் பார்த்து மகிழ கிடைத்திருக்கும் பெரும் வரப்பிரசாதம் Skype.

கொண்டாடவேண்டியதுதானே! ●


**- ம.பிரசாத்**

# புதியவர்களுக்கு Microsoft Word2003




கடந்த இதழில் எழுத்துருக்களை மாற்றியமைத்தல் தொடர்பான விடையங்களைப் பார்த்தோம். தட்டச்சு செய்யப்பட்ட பந்திகளை நமக்குத் தேவையான விதத்தில் எவ்வாறு ஒழுங்குபடுத்துவது என்பதை இம்முறை பார்க்கலாம்.

பந்திகள் தொடர்பான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நாம் Format Menu ⟶ Paragraph ல் உள்ள கட்டளைத் தொகுதியைப் பயன்படுத்துவோம். இதில் Indents and Spacing மற்றும் Line and Page Breaks என இரண்டு வித கட்டளைத் தொகுதிகள் காணப்படும். இவை பற்றி விரிவாகக் காண்போம்.





தட்டச்சு செய்யப்பட்ட பந்திகளைத் தெரிவு செய்துகொண்டு Format Menu ⟶ Paragraph ஐ கிளிக் செய்து Indents and Spacing மற்றும் Line and Page Breaks என இரண்டு வித கட்டளைத் தொகுதிகளை உள்ளடக்கிய Paragraph எனும் துணை Menuவுக்குச் சென்றடைவோம். இங்கு Indents and Spacing எனும் தலைப்பின் கீழ் உள்ள கட்டளைகள் ஒவ்வொன்றும் பந்திகளில் நாம் விரும்பும் மாற்றங்களை ஏற்படுத்த உதவுகின்றன.





General Alignment பகுதியிலுள்ள List Boxல் Left, Centered, Right, Justifiedஆகிய தெரிவுகள் இருக்கும். இவற்றில் ஏதேனுமொன்றைத் தெரிவு செய்யும் போது அதற்கேற்றாற்போல் நாம் தேர்வு செய்யும் பந்தியும் மாற்றியமைக்கப்படும்.

அடுத்ததாக உள்ள Outline Level கட்டளையானது நாம் தயாரித்து வைத்துள்ள ஆவணத்திற்குத் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கான பல்வேறு வகையான பாணிகளை (Styles) கொண்டுள்ளது. இவை பொதுவாக Outline Viewல் மட்டுமே தெரியும்.




Indentationல் உள்ள Left, Right Spin Button தெரிவுகளானது இடது அல்லது வலது பக்கங்களில் இருந்து நாம் தட்டச்சு செய்த விடயம் எவ்வளவு தூரம் தள்ளி நிறுத்தப்படவேண்டும் என்பதை நிர்ணயிக்கிறது. அருகிலுள்ள Special கட்டளைத் தெரிவில் First Line மற்றும் Hanging தேர்வுகள் இருக்கும். இதன் மதிப்பீட்டினை அருகிலுள்ள By எனும் Spin Button மூலம் மாற்றலாம்.




இவற்றில் முதல் தெரிவான First Line பந்தியின் முதல் வரி மற்றைய வரிகளில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி அமையவேண்டும் என்பதையும், இரண்-டாவது தெரிவான Hanging முதல்வரியை தவிர உள்ள மற்றைய வரிகளை எவ்வளவு தூரம் தள்ளி நிறுத்தலாம் என்பதையும் கட்டுப்படுத்துகிறது.


அடுத்தாக உள்ள Spacing கட்டளைத் தொகுதியில் முதன்மையாக Before மற்றும் After கட்டளைகளையும்,




இரண்டாவதாக உள்ள Line Spacing கட்டளையையும் கொண்டிருக்கிறது. இதில் Before மற்றும் After தெரிவு செய்யப்பட்ட பந்திக்கும் அதற்கு முன் மற்றும் பின் உள்ள பந்திகளுக்கும் இடையிலான தூரங்களை மாற்றியமைக்கும் பணியினைச் செய்கிறது.

அடுத்துள்ள Line Spacing கட்டளையில் தெரிவுசெய்த பந்தியில் வரிகளுக்கு இடையிலுள்ள தூரத்தை மாற்றியமைக்க உதவுகிறது.

Don't add space between paragraphs of the same style என்ற checkbox மூலம் ஒரே பாணியிலுள்ள பந்திகளுக்கு இடையே உள்ள இடைவெளி தேவையா இல்லையா என்பதைத் தெரிவுசெய்யலாம்.




இவற்றைத் தொடர்ந்து Microsoft Word ல் பந்திகளுக்கான திருத்தங்களைச் செய்வதற்கான கட்டளைத் தொகுதியில் அடுத்ததாக உள்ள Line & Page Brakes கட்டளைகளைப் பற்றிப் பார்ப்போம். இங்கு Pagination எனும் தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும் கட்டளைகள், நாம் தட்டச்சு செய்த ஒரு பந்திக்கும் அடுத்த பந்திக்கும் இடையேயான வெளிகளை எவ்வாறு இயல்பான விதியிலிருந்து மாற்றி நமக்கேற்ற விதத்தில் அமைக்க உதவுகிறது என்று பார்ப்போம்.

பொதுவாக Microsoft Word ல் நாம் தட்டச்சு செய்யும்போது பந்திகளுக்கான இடைவெளி மற்றும் பந்திகளுக்கும் வரிகளுக்குமான தொடர்புகள் போன்றவை தானாகவே கொடுக்கப்படும்.

Widow / Orphan Controlன் Widow தெரிவின் மூலம், ஒரு பந்தியின் கடைசி வரி அடுத்த பக்கத்தின் முதல் பந்தியின் வரியாக தானாகவே அச்சிடப்படும். அதேபோன்று Orphan மூலம் பந்தியின் முதல் வரியானது அதற்கு முன் உள்ள பக்கத்தின் கடைசி வரியில் சேர்க்கப்படும். இது பக்கத்தின் அமைப்பைப் பொறுத்தே அமையும். பொதுவாக இந்தக் கட்டளையானது தெரிவுசெய்யப்பட்டு இருக்கும்.

பந்திகளும் அதனோடு தொடர்புடைய வரிகளும் தட்டச்சின்போது அடுத்த பக்கத்துக்கு செல்கையில் பிரிந்துவிடாமல் தொடர்ந்து அதே பந்தியுடன் இருப்பதற்கு Keep Lines Together check box ஐயும், அதேபோன்று தொடர்புடைய பந்திகளை கையாள்வதற்கு Keep With Text Check box ஐயும் பயன்படுத்தலாம்.

Page Break Before கட்டளையானது ஒவ்வொரு பந்திகளை-யும் தனியே ஒரு பக்கத்தில் தட்டச்சு செய்வதற்கு உதவுகிறது.

தேர்ந்தெடுத்துக் கொண்ட பந்தியின் வரிசை எண்ணை விட்டுச் செல்வதற்கு உதவும் கட்டளைதான் Suppress Line Numbers. இது Print View ல் மட்டுமே காட்சியளிக்கும்.

Indents and Spacing மற்றும் Line and Page Breakக்கும் பொதுவாக உள்ள Tab Tool ஐப்பற்றி Tabs பகுதியிலும், Don't Hyphenate பற்றி Tools பகுதியிலும் காணலாம்.

நாம் செய்யும் அனைத்து மாற்றங்களையுமே Preview பகுதியில் உடனுக்குடன் பார்த்துத் தேவையான மாற்றங்களைச் செய்துகொள்ளலாம் என்பது மேலதிக தகவல்.

இந்தப் பகுதியில் காணப்படும் அனைத்துச் செயல்பாடு-களும் Formating Menu ல் அமைந்திருக்கும். இதனை View Menu பகுதியில் Tool Bar ஐ தெரிவு செய்திருப்-பின் file menuக்கு கீழே இந்த மெனு காட்சியளிக்கும். இதில் உள்ள இறுதி ஒப்ஷனை தெரிவுசெய்வது நாம் மேலே குறிப்பிட்ட கட்டளைத் தொகுதிக்-குச் செல்வதற்கான குறுக்கு வழியாகும்.



மேலும் சில குறுக்கு வழிகள் உங்களுக்காக இங்கே தரப்பட்டுள்ளது.

| TO DO THIS | PRESS |
|---|---|
| Center a paragraph. | CTRL+E |
| Justify a paragraph. | CTRL+J |
| Left align a paragraph. | CTRL+L |
| Right align a paragraph. | CTRL+R |
| Indent a paragraph from the left. | CTRL+M |
| Remove a paragraph indent from the left. | CTRL+SHIFT+M |
| Create a hanging indent | CTRL+T |

| TO DO THIS | PRESS |
|---|---|
| Single-space lines | CTRL+1 |
| Double-space lines | CTRL+2 |
| Set 1.5-line spacing | CTRL+5 |


3

- அ.பெஸ்ரியன்

# PHOTO SHOP இல் எடிட்டிங்

ஒளிப்படமொன்றை தேவைக்கேற்ற வடிவங்களில் தெரிவு செய்தல் மற்றும் படங்களின் விளிம்புகளில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் போன்றவற்றைக் கடந்த இதழில் பார்த்தோம். ஒளிப்படங்களில் குறிப்பிட்ட வண்ணங்களைத் தெரிவு செய்து திருத்தங்களை மேற்கொள்வது மற்றும் படங்களின் அளவுகளை எளிய முறையில் மாற்றியமைப்பது பற்றி இம்முறை பார்க்கலாம்.

∴போட்டோஷாப் 7.0ல் உள்ள Magic Wand Tool ஆனது படங்களில் காணப்படும் வெவ்வேறு நிறக்கலவைகளையும் மாறுபட்ட அளவுகளில் உள்ள வர்ணங்களையும் தனித்தனியாகத் தேர்ந்தெடுத்து




மாற்றங்களை மேற்கொள்ள பயன்படுகிறது. இந்த Toolன் கட்டளைத்தொகுப்புகளான Color Range அல்லது Tolerance, Selection, Anti-aliased, Contiguous, Use all layers ஆகிய ஐந்தையும் ஒப்சன்பாரில் (Option Bar) கொண்டு உள்ளது. இவற்றைப்பற்றி விரிவாகக் காணலாம்.

Magic wand tool (Short cut - W) ஐ Tool Barல் தேர்வுசெய்து கொள்ளுங்கள்.



உங்கள் விருப்பத்துக்கு ஏற்றாற்போல் உள்ள 4 தெரிவுகளான Add a new Selection, Add to an existing selection, substract from a selection அல்லது Select an area interselected by other selectionஇல் ஏதேனும் ஒன்றைத் தெரிவுசெய்யலாம். நீங்கள் தெரிவு செய்வதற்கு ஏற்ப Magic wand toolன் குறியீடு மாற்றமடையும்.





தெரிவுசெய்த Toolஐ உங்களுக்கு வேண்டிய வர்ணத்தில் வைத்து சுட்டியை (Mouse)அழுத்தும் போது ஒத்த வர்ணத்தைத் தெரிவு செய்யலாம். தெரிவுசெய்யப்பட்ட பின் Color Balance, Hue / Saturation போன்ற கட்டளைகளை உள்ளடக்கிய Image → Adjustments மூலம் மாற்றங்களைச் செய்யலாம்.

Toleranceக்கு கொடுக்கப்படும் மதிப்பீடானது 0ல்தொடங்கி 255 வரை கொடுக்கலாம். நாம் மிகக்குறைந்த அளவில் மதிப்பீட்டைக் கொடுக்கும்போது ஒளிப்படத்தில் குறைவான அளவில் ஒத்தவர்ணம் தெரிவு செய்யப்பட்டிருக்-கும்.





மதிப்பீட்டின் அளவை அதிகரித்துக்கொண்டு செல்லும் போது படத்தில் காணப்படும் பெரும்பானமையான ஒத்த வர்ணம் தெரிவு செய்யப்படும்.





Option Barல் உள்ள Anti - aliased கட்டளையானது Magic wand tool லினால் தெரிவு செய்யப்பட்ட பாகத்தை வெட்டும் போது (ஒளிப்படத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக்கும் பின்புலத்-திற்கும் இடைப்பட்ட)

விளிம்பு எத்தகையதன்மையுடையதாக அமையவேண்டு-மென்பதனைத் தீர்மானிக்கிறது. Antialiased Check Boxல் சரியிடப்பட்டிருந்தால் ☑ மென்மையானதாகவும் இல்லையெனில் கடினமானதாகவும் விளிம்பு அமையும்.


Contiguous கட்டளையைத் தெரிவு செய்யும்போது ஒத்த வர்ணமுடைய அருகிலுள்ள வர்ணங்களை தேர்தெடுக்க அது உதவுகிறது. இக்கட்டளை தெரிவு செய்யப்படாத விடத்து ஒளிப்படம் முழுவதிலும் உள்ள ஒத்த வர்ணத்தை அது தெரிவு செய்கிறது.

Use all layers தெரிவு பற்றிய விளக்கம் Layers பற்றிய பகுதியில் மற்றுமொரு தொடரில் காணலாம்.

**குறிப்பு:** Magic wand tool ஆனது Bitmap file Modeல் செயல்படாது.

அடுத்ததாக, நாம் Crop Tool ஐப்பற்றி அறிந்து கொள்வோம். இந்த Tool ஆனது ஒளிப்படத்தைத்




தேவைக்கேற்ற அளவாக மாற்றப்பயன்படுகிறது. எவ்வாறு மாற்றியமைப்பது என்பது பற்றிப் பார்போம்.

மூன்று முறைகளில் இதனைச் செய்யலாம். மூன்றைப் பற்றியும் விளக்குகிறேன்.

**வழி 1:**

ஒளிப்படத்தினை திறந்தபின் crop tool ( Shortcut- C)



ஐத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். Option Barல் உள்ள உயரம் அகலம் ரெசலூசன் போன்றவற்றை Clear Button மூலம் அழித்துவிடுங்கள். படத்தின் தேவையான பகுதியினை சதுரம் அல்லது செவ்வகமாக தேர்தெடுத்துக்கொள்ளுங்கள்.

Clear Buttonக்கு முன் உள்ள Front Image Button நாம் திறந்து வைத்துள்ள ஒளிப்படத்தின் உயரம் அகலம் ரெசலூசன் போன்றவற்றைக் காட்டுகிறது.

தேர்ந்தெடுத்த பின் Option Barல் வேறு கட்டளைத் தொகுதி தோன்றும். அதில் Cropped Area Delete / Hide என Radio Button தேர்வு இருக்கும். இது நாம் தேர்ந்தெடுத்த பகுதியைத் தவிர உள்ள இடத்தினை அழித்திட அல்லது மறைத்து வைக்க




உதவுகிறது. அத்துடன் Shield எனும் Check Box நிற வேறுபாடு இல்லாத தேர்வை மேற்கொள்ளவும் Colorஆனது தேர்வுசெய்யப்பட்ட இடத்தினை தவிர மிகுதியுள்ள இடம் எந்த நிறத்தில் காட்டப்பட வேண்டு-மென்பதனையும் Opacity அந்த் நிறம் எந்த அளவுக்கு காட்டப்பட வேண்டுமென்பதனையும் கட்டுப்படுத்துகிறது.

**வழி 2:**

இது உயரம், அகலம் மற்றும் ரெசலூசன் போன்றவற்றை முன்கூட்டியே கொடுத்து Crop Toolஐப் பயன்படுத்தி வரையும்போது அதே அளவை ஒளிப்படத்-தில் தேர்வு செய்யலாம்.

**வழி 3:**

ஒளிப்படத்தைத் திறந்து தேவையான பகுதியை Marquee மூலம் தேர்ந்தெடுக்க பின்னர் Image ⟶ Crop




கட்டளையின் மூலம் தேர்வு செய்த பகுதியைத் தவிர மீதியுள்ளவற்றை நீக்கிவிட முடியும். Trim menuவில் top, Bottom, Left, Right ஆகியவற்றிலுள்ள Check boxஐ தெரிவு செய்வதின் மூலம் நீங்கள் படத்தின் எந்தப் பகுதியினை நீக்க வேண்டும் என்பதனை தெரிவுசெய்யலாம். எந்த நிறத்தின் அடிப்படையில் வெட்ட வேண்டுமென்பதனை Based On தீர்மானிக்கிறது. ●

**- அ.பெஸ்ரியன்**


## Google Chrome பணி செயல்முறைமை:

உலகத்தை உள்ளங்கைக்குள் சுருக்கியது இணையம் என்று நாம் மகிழ்ந்திருந்தோம் ஒரு காலத்தில். இப்போது கணினி - இணைய உலகையே தன் கைக்குள் அடக்கி வருகிறது Google.

இணையத் தேடல், மின்னஞ்சல், ஒரு பகுதியாகவே இருக்கும் இந்த Web Store இல் Chrome apps ஆக இனங்காணப்பட்டு நிறுவப்படக்கூடிய செய்நிரல்கள் ஏனைய இணைய உலாவிகளிலும் செயற்படக்கூடியது. இவை பெரும்பாலும் இணையத்தளம் சார்ந்த செய்நிரல்களாகவே இருப்பதால் இது சாத்தியமாகிறது.

ஆனால், நீங்கள் Apps ஐ extensions ஆக இனங்கண்டு கொள்ளக்கூடாது. Extensions எனப்படுபவை Chrome browser இற்கே உரித்தான add-ons ஆகும்.

**இன்னும் குழப்பமாக இருக்கிறதா?**




# Google Chrome BETA க்குள் அடங்கும் கணினி

இணைய உலாவி என்ற வரிசையில் அண்மையில் Chrome Web Store ஐ உலகளவில் அறிமுகப்படுத்தியுள்ளது Google. Apple இன் Apps Store கையடக்கத் தொலைபேசிகளில் புரட்சி செய்தது போன்று, Chrome Browser இல் ஆக்கபூர்வமான நிலைகளை ஏற்படுத்துவதே இதன் பிரதான நோக்கம். இந்த Web Store இல் தேவையான இணைய செய்நிரல்களைத் தேடி, நிறுவிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.


Web Store அறிமுக நிகழ்வுடன், இணைய உலாவியை மையமாகக் கொண்டியங்கும் Chrome OS பணிசெயல்முறைமையைக் கொண்ட புதிய Netbook அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. Chrome இன்

உண்மையில், Google இன் இலட்சியமான, எதிர்காலத்தை நோக்கிய திட்டங்களை எல்லோருக்கும் அவ்வளவு இலகுவில் விளங்கப்படுத்திவிட முடியாது. Google இன் இலட்சியக் கனவுகளை இந்த உலகம் புரிந்துகொள்ளக் கொஞ்சக் காலம் செல்லும்.

## Google இன் பாரிய திட்டம்

Google இன் திட்டம்தான் என்ன? எதிர்காலத்தில் எமக்குத் தேவையானது வெறும் இணைய உலாவி **(Web Browser)** மட்டுந்தான், வேறு எதுவுமல்ல என Google நினைக்கிறது. இணையத்திலேயே தங்கள் பெரும்பகுதி நேரத்தைச் செலவழிக்கும் இன்றைய கணினி பாவனையாளர்களுக்கு, வழமையான பணிசெயல்முறைகளான Windows, Mac OS போன்றவற்றிற்கான தேவை இழிவளவாக்கப்பட்டுவிடும் என அது கருதுகிறது. கணினிகள் மிக வேகமாக செயற்பட்டு, உடனடியாக இணைய உலாவியின் இடைமுகத்தை பயனருக்கு வழங்க வேண்டுமென்பதே Google இன் திட்டம்.

இந்த நிலை, Google இன் எளிமையான Chrome OS இனால் சாத்தியமாக்கப்பட்டுள்ளது என்பது இனிய செய்தி. இன்னும் எளிமையாகச் சொல்வதானால், கணினியை இயக்கியவுடனேயே இணையத்துக்குள்





அது நுழைந்துவிடும். பிறகு உங்களுக்குத் தேவையான எந்தவொரு செய்நிரல்களையும் இணையத்திலிருந்தே பெற்று நீங்கள் பயன்படுத்திக்கொள்ள-லாம். கணினியில் எந்தச் செய்நிரல்களும் இருக்கத் தேவையில்லை.

இணைய நிலை சார்ந்த செய்நிரல்கள் கொண்ட இந்தப் புதிய உலகில், சம்பிரதாய செய்நிரல்கள் இணைய நிலைச் செய்நிரல்களால் பிரதியிடப்படுவதோடு, உங்களுடைய அத்தனை கோப்புகள், தகவல்கள் என எல்லாமே உங்கள் கணினியில் சேமிக்கப்படாமல், இணையத்திலேயே வழங்கப்படும் சேவர்களில் சேமித்து வைக்கப்பட்டுவிடும். இந்த உயரிய எதிர்கால இட்சியத்துடன்தான Chrome Web Store வெளியிடப்பட்டது.

மூலமாக பயனர்களின் கருத்துக்களையும் சேர்த்து Chrome OSஐ Google இன்னுமின்னும் வளப்படுத்திக்கொள்ள எண்ணியுள்ளது.

இதேவேளை, Chrome OS ஐக் கொண்ட Netbook கள், அடுத்த வருடம் நடுப்பகுதியில் சந்தைக்கு வரவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்-ளது.

இணையத் தேடல் புரட்சியுடன் தனது பயணத்தை ஆரம்பித்த Google ஆனது, Gmail மூலம் மின்னஞ்சல் புரட்சி செய்து, தொடர்ந்து Flikr, Blog, Google Chrome என்று இன்னும் விரிவாகி, இப்போது பணிசெயல்முறையையே அறிமுகப்படுத்துமளவுக்கு கணினித் தொழில்நுட்பத்தை ஆக்கிரமித்துள்ளது.




Chrome இன் எதிர்காலத் திட்டங்களை எதிர்வுகூறவோ, விளக்கிச் சொல்லவோ மிகவும் கடினமாகும். அந்தளவு-க்கு, Google இன் நடவடிக்கைகள் கணத்துக்குக் கணம் பல புதுமைகள் செய்து வருகின்றன.

இந்த Chrome Browser அண்மைக் காலமாக மிகப் பெரியளவில் பிரபல்யமடைந்து வருவதோடு, 10 சதவீதமான சந்தைப் பங்குகளையும் கைப்பற்றிவிட்டது. அத்தோடு, புதிய Chrome OS கொண்ட Netbook கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரிடையே இப்போது பரீட்சார்த்த நிலையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்தோடு, Pilot Program

கையடக்கத் தொலைபேசித் துறையிலும் ஏற்கனவே Google Phone ஐ அறிமுகப்படுத்தியுள்ள அது, இப்போது Chrome OS ஐக் கொண்ட Netbook மூலம், ஏறத்தாள முழு தகவல் தொழில்நுட்ப உலகத்தையும் தனது ஆதிக்கத்துக்குள் கொண்டுவரப்போகிறது.

உள்ளங்கைக்குள் உலகத்தைச் சுருக்கியது இணையம். கணினி - இணைய உலகையே தன் கைக்குள் அடக்கியது Google ●

**பிரித்தானியாவிலிருந்து தாரிக் -**

**www.puthunutpam.com நன்றி: புதுநுட்பம்**

## தகவல் துளிகள்

facebook

ஒவ்வொரு வருடமும் உலகத்தில் ஆதிக்கம் செலுத்திய ஆளுமைகளைக் கௌரவிக்கும் பொருட்டு, பிரபலமான **TIME** சஞ்சிகையினால், குறித்த ஆண்டுக்கான Person Of The Year விருது அறிவிக்கப்படுவதுண்டு. 2010 ஆம் ஆண்டுக்கான Person of the Year ஆக, Facebook இன் ஸ்தாபகரான Mark Elliot Zuckerberg தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

Facebookஐ உருவாக்கியதன் மூலம் உலகளவில் மக்களை இணைக்கும் காரியத்தை வெகு லாவகமாக தொழில்நுட்பம் கொண்டு கையாண்டதன் விளைவே Mark Zuckerberg தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கான காரணம் எனச் சொல்லப்படுகிறது.

இதுவரையில், Facebook இல் 500 மில்லியன் பயனர்கள் கணக்குகளை வைத்திருக்கிறார்கள் என்பது போனஸ் தகவல். இதேவேளை, 2006 ஆம் ஆண்டு **TIME** இன் Person Of The Year ஆக நீங்கள் (You) தெரிவுசெய்யப்பட்ட விடயத்தை மறந்துவிடாதீர்கள். அதனை எண்ணிப் பெருமைப்படுங்கள்.

## Wi-Fi Flash Drives - கமராவிலிருந்து நேரடியாக இணையத்துக்கு




டிஜிட்டல் கமராவில் எடுக்கும் படங்களை கணினிக்கு இறக்குதவற்கு அதனுடைய Memory Card ஐ Card Reader க்குள் சொருகிக் காரியத்தை முடிப்போம். இது மிகவும் இலகுவான காரியம்தான். ஆனால், Card Reader இல்லாவிட்டால் என்ன செய்வது?

Lexar Shoot n- Sync என்ற 2 GB கொள்ளளவுள்ள SD Card முழுக்க முழுக்க Wi-Fi தொழில்நுட்பத்திலேயே இயங்கும். இதனைப் பயன்படுத்துவோர் Eye-Fi என்றழைக்கப்படும் Online சேவை மூலம் ஒரு தடவை Set-up செய்துவிட்டால், அதன்பின், நினைவகத்திலுள்ள படங்களை நேரடியாகவே கணினிக்கு இறக்கிக்கொள்ளலாம்.

இதைப் பயன்படுத்துபவரின் Wireless எல்லைக்குள் இருக்கும் வரையில், படங்களை நேரடியாக இணையத்துக்குத் தரவேற்றம் செய்யவும் முடியும். Flikr, Picasa, Facebook, TypePad போன்றவற்றுக்கும், இதன்மூலம் நேரடியாகப் படங்களைத் தரவேற்றம் செய்ய முடியும்.

SD (Secure Digital) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் எந்த டிஜிட்டல் கமராக்களுடனும் இதனைப் பயன்படுத்த முடியும். ஆரம்பத்தில் இதனை Configure செய்வதற்காக Digital Card Reader ஐயும் இது கொண்டிருக்கும்.




## Panasonic AG-3DA1



உலகின் முதலாவது முப்பரிமாண (3D) தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்-பட்டுள்ள உயர் ஒளிக்காட்சி (HD – High Definition) கொண்டியங்-கும் வீடியோ கமரா பனசோனிக் AG-3DA1 இதன் நினைவகமாக SD காட் தொழில்-படுகிறது. இந்த வீடியோ கமரா மூலம் மிகவும் துல்லியமாக அதேவேளை எளிமையாக முப்பரிமாண வீடியோ காட்சிகளைப் பதிவு செய்யலாம்.



சுமார் 3 கிலோ நிறையுள்ள இந்த வீடியோ கமராவானது 1920 x 1080 2.07 மெகா பிக்சல் வரை காட்சிகளைப் பதிவு செய்யக்கூடியது. சாதாரணமாக 180 நிமிடங்கள் உயர்காட்சித்தரத்தில் பதிவு செய்து வன்தட்டில் இந்த வீடியோ கமராவினால் பதிவு செய்ய முடியும்.

இதைவிடத் இந்த கமராவுடன் இரண்டு SD காட்களும் வழங்கப்படுகின்றன. Hd-SDI மற்றும் 2 XLR வெளியீடுகளை இது கொண்டுள்ளது. அத்துடன் வீடியோகமராவுடன் உள்ளிணைக்கப்பட்ட மைக் மற்றும் ரிமோட் கொணட்ரோல் ஆகியவற்றையும் இது கொண்டுள்ளது.

## Nokia N8



நோக்கியாவின் புதிய புரட்சியாக வெளிவந்திருக்கும் இந்தக் கைபேசி சிம்பியொன் (Symbian 3) எனப்படும் புதிய பணிசெயல் முறைமை (Operating System) யில் இயங்குகிறது. ஒளிப்படங்-கள் (12.1 Mega pixel) மற்றும் வீடியோப் படப்பிடிப்பில் கலக்கும் இந்த ஸ்மார்ட் ஃபோன் 2G : GSM 850 / 900 / 1800 / 1900, 3G : HSDPA 900 / 1900 / 2100 ,HSDPA 850 / 1900 / 2100 - தொழில்நுட்பத்தையும் கொண்டிருக்கிறது. இது 135 கிராம் எடையும் பலவழி தொடுதிரை வசதியையும் கொண்டுள்ளது. இப்போது சுமார் 550 அமெரிக்க டொலர் விலையில் உலக சந்தைக்கு வந்திருக்கும் இந்தக் கைபேசி இப்போது இலங்கையிலும் சுமார் 60,000 ரூபாவுக்குக் கிடைக்கிறது.



# “விபத்துக்களைத் தவிர்க்க ஒத்துழையுங்கள்”

**சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ**

போக்குவரத்துப் பாதைகள் சுமுகமாகத் திறந்துவிடப்பட்ட பின்னர் யாழ் குடாநாட்டிலே வீதி விபத்துக்களும், உடல் உயிராபத்துக்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவற்றைக் குறைப்பதற்கு வாகன ஓட்டுநர்கள் என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பாக டிசம்பர் இதழில் நில்!கவனி!!செல்..!!!' என்ற ஆக்கத்தில் விளக்கியிருந்தோம்.

இந்த வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக போக்குவரத்துப் பொலிஸார் வீதிகள் தோறும் கடமையில் ஈடுபட்டு வருகிறார்கள். வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த அவர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பற்றி யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு.நேவின் பத்மதேவ அவர்களிடம் கேட்டோம்.

“கடந்த 30 ஆண்டு காலமாக நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் யாழ்ப்பாண மக்கள் ஒரு கட்டுப்பாட்டுக்குள், ஒரே இடத்துக்குள்ளேயே முடங்கி வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்டார்கள். குறிப்பாக இளஞ் சமுதாயத்தைப் பொறுத்தவரையில், பாடசாலை, ரியூசன், வீடு என்ற வட்டத்துக்குள்ளேயே இருந்து வந்துள்ளனர். இக்காலவெல்லையில் சாதாரணமாக போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாதவர்களாகவும், சுதந்திரமாக வாகனங்கள் கொள்வனவு செய்து பயணிப்பதற்கான சூழ்நிலை இல்லாதவர்களாகவே அனைவரும் இருந்துள்ளனர்” என்று அவர் சிங்களத்தில் கூற, சக பொலிஸ் உத்தியோகத்தரான குணசேகரம் அதை எமக்குத் தமிழ்ப்படுத்தினார்.

இந்த நிலையில், இப்போது திடீரென அதிகரித்துள்ள வாகன நெரிசலும், மக்களிடம் வீதி ஒழுங்குகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமையுமே விபத்துக்களுக்கான பிரதான காரணங்களாக சுட்டிக்காட்டிய அவர், வீதி விபத்துக்களைக் குறைக்க மக்களிடம் தாம் எதிர்பார்க்கும் விடயங்களையும் விளக்கிக் கூறினார்.

“பாடசாலை மாணவரிடையே வீதி ஒழுங்குகள் சம்பந்தமான கல்வியறிவு புகட்டப்படவேண்டும். அத்துடன், சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரிடமும் இவ்விழிப்புணர்வு சென்றடையவேண்டும். வீதி ஒழுங்குகளைக் கண்காணிப்பதில் மாணவர்களைக் குறிப்பிட்ட நேரங்களில் ஈடுபடுத்தலாம்” என்று கேட்டுக்கொண்ட அவர், இதற்காகத் தாமும் பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களிடையே விழிப்புணரவுச் செயலமர்வுகளை நடத்தி வருவதாகவும் கூறினார்.

கொழும்பு பொலீஸ் தலைமையகத்தில் இருந்து வந்த 35 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வீதி போக்குவரத்து விதிமுறைகள் சம்பந்தமான கண்காட்சி ஒன்றை நடாத்தியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.



“குடிபோதையில் வாகனங்கள் செலுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள-வேண்டும். அதுமட்டுமன்றி, பாதசாரிகளும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க-வேண்டும். அனைவருமே வேகக் கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டும்” என்றும் அவர் கேட்டுக்-கொண்டார்.

மக்களின் வாழ்வைப் பாதுகாத்துக்-கொள்ளும் வகையில் வீதிகளில் முரண்படும் சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரம் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

“பொலிசாராகிய நாம் மக்களை நேசிக்கிறோம். தனியே எம்மால் மட்டுமே வீதி விபத்துக்களைக் குறைக்க முடியாது. இதைப் புரிந்துகொண்டு வீதியில் செல்லும் அனைவரும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்து தங்களதும், மற்றைய-வர்களினதும் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாத்துக-கொள்ள வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்” என்றார் அவர்.●



**- மு.சிவநாதன்**
**2ம் அணி**

# மூச்சுவிட 3 இடங்கள்

பச்சைப்பசேல் எனக் காட்சியளிக்கும் "கிறீன் பார்க் - Green Park", பூக்களும் செடிகளுமாய் நிறைந்திருக்கும் "பூங்கனிச் சோலை", சுகமாகச் சுற்றித்திரிய "சுப்பிரமணியம் பூங்கா" என யாழ்ப்பாணத்திலும் இப்போது பூங்காக்கள் பூத்துக் குலுங்குகின்றன. மலர்ந்திருக்கும் புதிய அமைதிச் சூழலில் இந்தப் பூங்காக்கள் இப்போது புதுப்பொலிவு பெற்று "பொழுதுபோக்க வாரீர்!" என்று எம்மை இருகரம் நீட்டி அழைக்கின்றன.

தனியே பிறந்தநாள் விழா, பூப்புனித நீராட்டுவிழா, திருமண விழாக்களுக்கான வீடியோ படப்பிடிப்புக்கா-கவே இந்தப் பூங்காக்களை நாடாமல், ஓய்வு நேரங்-களில் பொழுதை இனிதாகக் கழிக்க இங்கே செல்லலாம்.

## கிறீன் பார்க் – Green Park

அழகான மரங்கள், இடையிடையே கண்ணைப்பறிக்கும் சிற்பங்கள், மரநிழல்களின் கீழ் இருக்கைகள், மனதைக் கவரும் செயற்கை நீர் வீழ்ச்சிகள், இவை நடுவே அதிசயமாய் காட்சி தரும் கித்துல் மரங்கள் என வசீகரமாகக் காட்சி தருகிறது கிறீன் பார்க்.

152/2, கோவில் வீதியில் அமைந்துள்ள கிறீன்பார்க் காலை 9 மணியிலிருந்து மாலை 7 மணி வரை உங்களுக்காகக் காத்திருக்கும். இந்தப் பூங்காவைப் பயன்படுத்துவது பற்றி அதன் உரிமையாளர் சந்தியா பாக்கியநாதனிடமே கேட்டோம்.

"1990ல் பூங்கன்று விற்பனையில் ஆரம்பித்து 2004ல் 'கிறீன் பார்க்'காக இது வளர்ச்சி அடைந்தது" என்று கிறீன் பார்க்கின் தோற்றத்தை விளக்கிய அவர், "காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை காதலர்கள் வந்து செல்ல அனுமதிக்கின்றோம். மாலையில் குழந்தைகள், பெரியவர்கள் என அனைவரும் வந்து செல்லலாம்" என்று சொன்னார். இவருடைய மகனான நேருசனும் அவருடன் இணைந்து பூங்காவைப் பராமரித்து வருகிறார்.

"தற்போது மழைகாலம் என்பதால் பூங்காவை நாடு-வோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. ஆனால், பெப்ரவரி மாதத்தின் பின் இந்த நிலைமை மாறும்." என்று கூறிய நேருசன், எமக்குப் பூங்காவைச் சுற்றிக் காட்டினார்.


"எல்லா ஏற்பாடுகளும் நன்றாகவே உள்ளன. பூங்காவின் சூழல் இன்னும் சற்றுப் பெரிதாக இருந்தால் நன்றாக இருக்கும். நிழல் தரு மரங்களையும் அதிகளவிலான இருக்கைகளையும் எதிர் பார்க்கின்றோம்" என்று அங்கிருந்த காதலர்களில் சிலர் எம்மிடம் தெரிவித்தனர்.

## பூங்கனிச்சோலை

எம் கவனத்தை ஈர்த்த மற்றொரு பூங்காவான, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள பூங்கனிச்சோலைக்குச் சென்றோம். விதவிதமான பூங்கன்றுகள், தொங்குபாலம், நீரில் மிதக்கும் பந்து, செயற்கை





மலை நீர்வீழ்ச்சி, 'ஆ…'வென்று அகல வாய்திறந்து அச்சமூட்டும் சிங்கம், முதலைகள், டைனோசார் இன்னும் கண்ணைக் கவரும் சிற்பங்கள், புற்தரைகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்-டிருந்த இருக்கைகள் என அனைத்துமே மனதை ஈர்த்தன.

பூங்காவின் உரிமையாளர் திருமதி. வசந்தரூபி பக்தகுணசீலன் பூங்கா பற்றி எம்மிடம் விளக்கினார்.

தனது கணவரின் கனவே இந்தச் சோலை என்று கூறிய அவர், கணவரது திடீர் மரணத்தின் பின் தனித்து தானே பூங்காவை நிர்வகிப்பதால் மேலதிக அபிவிருத்திகள் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்று கூறினார்.

"எல்லோருடைய வரவேற்பும் இருப்பதால், இனிவரும் காலங்களில் பூங்காவின் வளர்ச்சியை பிள்ளைகள் கவனித்துக் கொள்வதுடன் இன்னும் மெருகேற்றுவார்கள்" என்று நம்பிக்கையுடன் கூறினார் அவர்.

"எல்லா வயதினரும் இங்கு வந்து செல்கின்றனர். அதிகளவில் சிறுவர்களே இங்கு வருவதால் காதலர்களுக்கு நாம் அனுமதி வழங்குவதில்லை" என்று கூறினார் அவர்.

## சுப்பிரமணியம் பூங்கா

யாழ் நகரின் மத்தியில் யாழ் நூலகத்துக்கு எதிரேயுள்ள சுப்ரமணியம் பூங்காவுக்குச் சென்றோம். முன்னாலேயே பூப்போன்று வானை நோக்கி விரிந்து நீரை விசிறும் அழகிய நீர்த்தடாகம் எம்மை வரவேற்றது. எல்.பி. ஃபினான்ஸ் நிறுவனம் அண்மையில் இதனைப் புனரமைத்து மாநகரசபை நிர்வாகத்திடம் பொறுப்பளித்துள்ளது.

உள்ளே விதவிதமான அலங்காரச் செடிகள், பூத்துக் குலுங்கும் அழகிய பூமரங்கள், புற்தரை, மணற்பரப்புக்கள் எனக் காட்சியளித்த சுப்பிரமணியம் பூங்காவில், சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டிருந்த விளையாட்டு உபகரணங்கள், இருக்கைகள், அழகிய சிற்பங்கள் அவர்களைத் துள்ளிக் குதிக்கச் செய்கின்றன.


எலிஃபன்ட் ஹவுஸ் நிறுவனத்தினர் அண்மையில் இந்தப் பூங்காவில் புதிதாக பல சிறுவர் விளையாட்டு உபகரணங்களை அமைத்து, 5 வருடங்களுக்குப் பூங்காவைப் பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்றுள்ளனர்.

இந்தப் பூங்காவின் மேற்பார்வையாளர் சு.ரஜீரை அணுகி பூங்காவின் தற்போதைய நிலை பற்றிக் கேட்டபோது, பூங்காவை மேலும் மெருகூட்டவும், நீச்சல் குளம் ஒன்றை அமைக்கவும் திட்டமிட்டிருப்பதாக உற்சாகச் செய்தியைக் கூறினார்.

"சில காதலர்களின் செயற்பாட்டால் குழந்தைகள் பாதிக்கப்பட்டனர். இதனால் அவர்களை அனுமதிப்பதைத் தடுத்து விட்டோம்." என்று கூறினார் அவர்.

"களைப்புடன் வந்த எங்களுக்கு நல்ல குளிர்ச்சியைச் தருகின்றது இந்தப் பூங்கா. குழந்தைகள் மகிழ்வுடன் விளையாடுகின்றனர். மனதிற்கு நல்ல அமைதியைத் தரும் இப்பூங்காவில் இடவசதிதான் சற்றுக் குறைவாக உள்ளது. இன்னும் சற்று விரிவாக்கினால் நல்லது" என்றார், தனது உறவினர்களுடன் வறக்காப்பொலயிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வந்திக்கும் முகமது இக்பால் என்ற குடும்பஸ்தர்.

கவலைகளை மறந்து மனதை இயற்கையில் இலயிக்கவிட ஒருமுறை இந்தப் பூங்காக்களுக்குச் சென்றுதான் பாருங்களேன்! ●



**- சிந்து.சச்சி**

**2ம் அணி**

இன்று அதிகமானவர்கள் 'தலையிடி' என்று வைத்தியசாலை சென்றால் அவர்களுக்கு உடனடியாக மூக்குக்கண்ணாடி அணிவது தான் தீர்வாகிறது. முகத்தின் வசீகரமே கண்ணில் தான் தங்கியுள்ளது என்பதனால் மூக்குக் கண்ணாடி அணிவதை இளைஞர்கள் விரும்புவதில்லை. இவர்கள் தமது கண்ணின் பார்வைக் குறைபாடு பற்றி அசட்டை செய்வதால் பார்வைத்திறன் குறைந்துகொண்டே செல்கின்றது.

புத்தகம் வாசித்தல் போன்றனவும் கண் பார்வைக் குறைபாட்டை அதிகரிக்கச் செய்கின்றது.


கண்களில் ஏற்படும் பார்வைக் கோளாறுகள் பொதுவாக இரண்டு வகைப்படும். 1. 'மயோபியா' அல்லது கிட்டப் பார்வை 2. 'ஹைப்பர்மெட்ரோபியா' அல்லது தூரப் பார்வை.

இதுதவிர கம்பியூட்டர் விஷன் சின்ட்ரோம் **(Computer Vision Syndrome)** எனும் பார்வைக்

தெரிவதுடன், கண்களை வேகமாக அடித்தல், அதிக கண்சோர்வு மற்றும் கண்ணைச் சுற்றி வலி போன்ற பிரச்சினைகளும் வரலாம்.

மயோபியா உள்ளவர்களுக்கு, "மைனஸ் பவர்" இருக்கும்.

**தூரப்பார்வை (Hypermetropia)**
'ஹைப்பர்மெட்ரோபியா' எனும் கண்பார்வைக் குறைபாடு ஏற்பட்டால், கிட்டப் பார்வை குறைவாகத் தெரியும். 'பிளஸ் பவர்' அதிகமாக இருக்கும்.




# கண்ணே! நலமா?

அதிக நேரம் கணினியுடன் இருத்தல், தொலைக்காட்சி பார்த்தல் என்பனவே பொதுவாக மாணவர்கள் - இளைஞர்கள் மத்தியில் பார்வைத்திறன் குறையவும், தலையிடி ஏற்படவும் பிரதான காரணிகளாக உள்ளன. இது தவிரவும், மிகச்சிறிய எழுத்துக்களைக்கொண்ட புத்தகங்களை வாசித்தல், ஒளி குறைந்த இடங்கள் மற்றும் ஓடும் வாகனங்களிலிருந்து



குறைபாட்டு நோயும் கணினிப் பாவனையாளர்களுக்கு ஏற்படுகிறது.

**கிட்டப்பார்வை (Myopia)**
'மயோபியா'வில் தொலைவிலுள்ள





எழுத்துக்கள் மற்றும் பொருள்கள் மங்கலாகத் தெரியும். அருகிலுள்ள பொருள்கள் தெளிவாகத் தெரியும். இது பிறந்த குழந்தையிலிருந்து முதியவர் வரை யாருக்கும் வரலாம். இக்குறைபாடுள்ளவர்களின் கண்ணின் அளவு பெரிதாக இருக்கும்.

இவர்களுக்கு தொலைதூரக் கண்பார்வைக் குறைவு, தலைவலி, கண்ணில் நீர் வழிதல் ஆகிய பிரச்சினைகள் ஏற்படும். குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு, கரும்பலகையில் எழுதும் எழுத்துக்கள் மங்கலாக


இக்குறைபாடுள்ளவர்களின் கண் சிறியதாக இருக்கும்.

குறிப்பாகக் குழந்தைகளுக்கு இப்பார்வைக்குறைபாடு இருந்தால்,



சிறு வயதிலேயே அவர்கள் கண்ணாடி அணியவேண்டும். இல்லையெனில், பிற்காலத்தில் கண்பார்வை சீராக வராமலே போய்விடும்.

**தீர்வு:**
வைத்தியரின் ஆலோசனைப்படி மைனஸ், பிளஸ் பவர் உள்ள மூக்குக் கண்ணாடிகள் மற்றும் கொன்டாக்ட் லென்ஸ் அணியலாம். தற்போது கண்ணாடி அணிவதால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, 'லாசிக்' எனும் லேசர் முறை சிகிச்சை கொண்டுவரப்பட்டுள்ளது.



**லாசிக் சிகிச்சை:**


கண்ணாடி அணிவதால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே, 'லாசிக்' எனும் லேசர் முறை சிகிச்சை கொண்டு வரப்பட்டது. 'இன்ட்ராலேஸ் சையாப்டிக்ஸ்' (Intralase Zyoptix) எனும் நவீன லேசர் முறையில், கண்ணில் இருக்கும், 'மைனஸ் பவர்' குறைக்கப்படுவதன் மூலம், பார்வை குறைபாட்டை சரி செய்து கொள்ள முடியும்.

'இன்ட்ராலேஸ் சையாப்டிக்ஸ்' முறை லேசர் சிகிச்சைக்கு, மயக்கம் கொடுக்கத் தேவையில்லை. கண்களில் சொட்டு மருந்து (Local Anesthesia) மூலமாக உணர்ச்சிகளை குறைக்க வைத்து, லேசர் சிகிச்சை செய்யப்படும்.

மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை செய்யத் தேவையில்லை. 1 மணி நேரத்துக்குள் சிகிச்சை மற்றும் ஆய்வு முடிவுறும். இரண்டு கண்களுக்கும் ஒரே நாளில், ஒரே முறையில் சிகிச்சை பெறலாம். முதல் இரண்டு நாட்கள், கண்ணில் நீர் கசிவு மற்றும் உறுத்தல் என்பன இருந்தாலும், மருந்து மூலம் இதற்குத் தீர்வு காணலாம். பெரும்பாலான நோயாளிகளிடம், ஒரே வாரத்தில் நல்ல மாற்றம் தெரியும்.

இதன்மூலம், பார்வைக் குறைபாடு சீராவது மட்டுமில்லாமல், பார்வைத்திறனும் நன்றாக இருக்கும்.

18 வயது நிறைந்தவர்கள், இரண்டு கண்களிலும் பார்வைத் திறன் குறைபாட்டில் சமநிலை அடைந்தவர்கள் மற்றும் கருவிழியில் வேறு எந்த குறைபாடும் இல்லாத-வர்கள், இந்தச் சிகிச்சையைப் பயமின்றி மேற்கொள்ளலாம்.




**கம்ப்யூட்டர் விஷன் சின்ட்ரோம் (Computer Vision Syndrome)**

நாம் அச்சில் படிப்பது போன்ற எழுத்துக்கள் அல்ல, கணினித் திரையில் பார்ப்பது. கணினி எழுத்து, திரையில் பல புள்ளிகள் சேர்ந்து உருவாகுபவை. இதனை 'பிக்ஸெல்'(Pixel) என்பார்கள். இதைப் பார்த்துக் கொண்டே இருக்கும் போது அதிலிருந்து பார்வை விலகி விடும். மறுபடி மறுபடி உற்றுநோக்க வேண்டியிருக்கும். அப்படிச்செய்யும் போது பாதிப்பு ஏற்படுவதால் கண்ணில் வலி உண்டாகிறது.

ஓரளவுக்கு இது கணினித் திரையின் ஒளியால் ஏற்படும் பாதிப்புத்தான். ஆனால், நவீன எல்சிடி (LCD) திரையுள்ள கணினியில் இப்பாதிப்பு வரும் வாய்ப்புக் குறைவாகும்.

**தீர்வுகள்:**


கணினியில் வேலை செய்வோர் கண்களுக்கு இடையிடையே சிறு




ஓய்வு கொடுத்துப் பணியைச் செய்யலாம். 5 நிமிடத்துக்கு ஒருமுறை கணினி திரையிலிருந்து பார்வையை விலக்கவேண்டும்.

தொடர்ந்து 8 முதல் 10 மணி நேரம்இடைவிடாமல் கணினித் திரையைப் பார்ப்பதைத் தவிர்க்கலாம்.

கணினித்-திரையைப் பார்ப்பதற்கு அதற்காக வடிவமைக்கப்-பட்ட கண்ணாடிகளை, மருத்துவரின்



ஆலோசனையுடன் அணியலாம்.

கணினியிலிருந்து வெளியேறும் ஒளிச்செறிவைக் கட்டுப்படுத்தும் கணினித் திரைகளை (Anti Glare-Screen) கணினியுடன் இணைத்துக் கொள்ளலாம்.

50cm இடைவெளியில் கணினித்-திரை கண்ணிலிருந்து இருக்க வேண்டும். இத்துடன் நிமிர்ந்த நிலையிலிருந்து, செங்குத்தாகவே கணினித் திரையைப் பார்க்க வேண்டும்.

கணினித்திரை நிலத்திலிருந்து 60-80 செ.மீ உயரத்தில் வைக்கப்-பட வேண்டும். கணினிப் பாவனையின் போது ஒளிவிளக்கின் வெளிச்சம் தலைக்குப் பின்னிருந்து வரவேண்டும்.

கணினியைப் பயன்படுத்தும்போதோ, தொலைக்காட்சி பார்க்கும் போதோ ஒளி விளக்கை அணைக்-கூடாது.

**தலைவலி**

எல்லாத் தலைவலிகளுக்குமே காரணம் கண் என்று எண்ணிவிடக்-கூடாது. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். கண்ணின் பார்வைத்-திறன் குறைபாடும் ஒரு காரணியாக இருக்கலாம். அதனைவிட கண் தசைகளின் பலம் குறைந்தாலும் தலைவலி ஏற்படும். எனவே, கண்களைப் பரிசோதித்த பின், காரணம் அறிந்து, சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும் ●

**- யசோநிதி**

ஆசியாவில் மிகப் பிரசித்திபெற்ற யாழ்.பொதுநூலகம் 1981இல் எதிர்கொண்ட அழிவுகளிலிருந்து மீண்டு, 2003 முதல் ஃபீனிக்ஸ் பறவையாக புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

அது திரட்டி வைத்திருந்த ஏராளமான அரும்- பெரும் சொத்துக்களை 1981 மே 31 நள்ளிரவு மூட்டப்பட்ட தீயில் இழந்துவிட்டபோதும், தற்காலத்துக்குத் தேவையான ஏராளமான நூல்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் இப்போது மீண்டும் பொலிவுற்றிருக்கிறது.

போர் ஓய்ந்தபின் இப்போது இன்னும் அது உயிரூட்டம் பெற்று அனைவரையும் இரு கரம் நீட்டி வரவேற்று நிற்கிறது.

சாம்பலாக்கப்பட்டபோது ஏறத்தாள ஒரு இலட்சம் (சரியாக 97,000) நூல்கள் மற்றும்



இலங்கையை ஆசியாவின் அதிசயமாக்குவது பற்றி இப்போது அதிகம் பேசப்படுகிறது. யாழ் நூலகம் 80களுக்கு முன்னரே ஆசியாவின் அதிசய நூலகமாகத் திகழ்ந்த ஒன்று.

இப்போது மீண்டும் தலை நிமிர்ந்து நிற்கும் இந்த நூலகத்தில் அங்கத்தவராகி பயனடைய வேண்டாமா?

# ஆசியாவின் அதிசயத்தில் அங்கத்துவராவோம்!

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓலைச் சுவடிகள் என ஏராளம் பொக்கிஷங்களைக் கொண்டிருந்த அது, இப்போது மீண்டும் அதேயளவு புத்தகங்களை நோக்கி அது இன்னும் வளர்ந்து கொண்டு வருகிறது.

"நூலகத்திற்கு வருகை தருவோரில் அநேகர் மாணவர்கள். இவர்கள் கல்வி சம்பந்தமான நூல்களில் கவனம் செலுத்துகின்றனர். மிகுதியினர் பொழுதுபோக்கு அம்சமான நூல்களில் ஆர்வம் காட்டுகின்றனர்" என்று, இன்று இந்த நூலகத்தைப் பயன்படுத்துவோர் பற்றிக் கூறுகிறார் இதன் பிரதான நூலகர் கே.தனபாலசிங்கம்.

பழைய பத்திரிகைகளின் சேகரிப்பு, பழைய சம்பவங்கள் பற்றி தகவல் திரட்டவும் பலர் நூலகத்துக்கு வருவதாகக் கூறும் அவர், அறிவை வளர்த்துக்கொள்வது பற்றி பலரும் கவனம் செலுத்தத் தவறுகின்றனர் என்று கவலை தெரிவிக்கிறார்.

"பொது அறிவு மற்றும் ஆங்கில நூல்கள் என்பவற்றில் பலரும் அக்கறை காட்டிப் படிப்பதாகத் தெரியவில்லை" என்று வேதனைப்படும் அவர், நூலகத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மிகவும் குறைந்திருப்பதாகவும் குறைப்படுகிறார். அன்பளிப்பாக கிடைத்த ஏராளமான ஆங்கில நூல்கள் கைபடாமல் கிடப்பதாகவும் அவர் கூறுகிறார்.

"இற்றைவரை 14,000 வாசகர்கள் உறுப்பினர்களாகப் பதிவுசெய்துள்ளபோதும், தினமும் சராசரியாக 100 முதல் 150 வாசகர்களே வருகை தருகின்றனர். வாசிப்புப் பழக்கம் எந்தளவு நிலையில் இருக்கிறது என்பதற்கு இதுவே சான்று" என்கிறார் அவர்.


### யாழ் பொது நூலகத்தின் சேவைகள்


**I.பருவ வெளியீட்டுப் பிரிவு**
சுமார் 100 பருவ வெளியீடுகள் மற்றும் 15க்கும் மேற்பட்ட பத்திரிகைகள் இங்கே கிடைக்கிறது.


**II.இரவல் வழங்கும் பிரிவு**30,000க்கும் மேற்பட்ட நூல்களுடன் நமது அறிவுத்தேட்டத்துக்குக் கைகொடுக்கக் காத்திருக்கிறது.

**III.சிறுவர்களுக்கான பிரிவு**
சிறுவர் அறிவுத் தேட்டத்துக்கான ஏராளமான தமிழ், ஆங்கில நூல்கள், கலைக் களஞ்சியங்களுடன், கணினி விளையாட்டுக்கள், ஒலிநாடாக்கள் மூலம் கதை கேட்கும் வசதிகள் இந்தப் பகுதியில் உள்ளன.

**IV.விசேட சேர்க்கைப் பிரிவு**
அக்கறையுள்ள பல இலங்கை, இந்திய தனி நபர்கள், நிறுவனங்கள் வழங்கிய 10,000 வரையிலான நூல்கள் இங்கே உள்ளன. அமெரிக்கத் தூதரகத்தால் வழங்கப்பட்ட 58 நுண்சுருள்களில் முன்னர் வெளிவந்து நின்றுபோய்விட்ட வெளியீடுகளைப் பார்க்கலாம்.







**V.உசாத்துணைப் பிரிவு**
இங்குள்ள அரிய நூல்களை இரவல் பெற முடியாது. நூலகத்திலிருந்தே படித்துப் பயன் பெறலாம்.

**VI.விசேட ஆவணப் பிரிவு**
ஏராளமான அரிய நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் இங்கே ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

**VII.இலங்கை நூல்கள் பிரிவு**
இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள், இலங்கை வெளியீடுகள் இங்கே உள்ளன.

இவைதவிர, **கணினி இணைய சேவை, கேட்போர் கூடம், நடமாடும் நூலக சேவை, சுயமாக கல்வி கற்போர் கூடம்** ஆகியவற்றையும் இது கொண்டிருக்கிறது.


கணினி இணைய சேவையைப் பயன்படுத்த ஒரு மணித்தியாலத்துக்கு 30ரூபாய் அறவிடப்படுகின்றது.

மாணவர்கள் அமைதியான சூழலில் சுயமாக இருந்து கற்கக்கூடிய வகையில் கல்வி மண்டபமும், கூட்டம் மாநாடு போன்ற-வற்றை நடாத்த குளிரூட்டல் வசதி-கொண்ட கேட்போர் கூடமும் இங்குள்ளது.

மாணவர் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்-பதற்கு யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு நடமாடும் நூலக சேவை உதவுகிறது.

சுயமாக ஆங்கிலம் கற்கும் விசேட பிரிவில் கணினி வசதியுடன் ஆங்கிலம் கற்பதற்கு மணித்தியாலத்துக்கு 20 ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது.


நூலகத்திற்கு அன்றாடம் வந்து செல்வதற்கு வாசகர் அனுமதியை 50 ரூபா செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வருடமும் இதனைப் புதுப்பிக்கவேண்டும். ●






**- தனுஷ், 2ம் அணி**







## அங்கத்துவராவதற்கான நிபந்தனைகள்

✷ அங்கத்துவர் 14 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

✷ பாதுகாப்பு வைப்புப் பணம் ரூபா 400. மாணவர்கள் ரூபா 300 செலுத்த வேண்டும்.

✷ ஆண்டுக் கட்டணம்: மாநகரசபை எல்லைக்கு உள்ளே வசிப்போர் ரூபா 250, மாநகரசபை எல்லைக்கு வெளியே வசிப்போர் ரூபா 300. மாணவர்கள் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் ரூபா 100.

✷ பிணையாளர் ஒருவர் பிணை உறுதி வழங்கவேண்டும்.


✷ மாநகரசபை எல்லைக்கு வெளியே வசிப்போர் தமது கிராமசேவை அலுவலரின் சிபாரிசு பெறவேண்டும்.


✷ பதிவு செய்த நாளிலிருந்து ஒரு வருட முடிவில் பிணையாளரின் உறுதியுடன் புதுப்பித்தல் வேண்டும் (அதேயளவு கட்டணம் அறவிடப்படும்).

விண்ணப்ப படிவம்: ரூபா 25

✷ ஒரே நேரத்தில் 02 நூல்கள் இரவல் பெறலாம். இரவல் பெற்ற தினத்திலிருந்த 14 நாட்களுக்குள் மீள ஒப்படைக்கவேண்டும். குறிப்பிட்ட திகதிக்குள் ஒப்படைக்காத நூல் ஒவ்வொன்றுக்கும் நாளொன்றுக்கு ரூபா 2 வீதம் தண்டம் அறவிடப்படும்.

✷ 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான அங்கத்துவப் பணம் ரூபா 50.






## தவறுக்கு வருந்துகிறோம்!

சென்ற இதழில் இந்தப் பகுதியில் வெளியான மஹாகவி உருத்திரமூர்த்தியின் குறும்பாக்கள் சிலவற்றின் கடைசி வரிகள் பக்க வடிவமைப்புப் பணிகளின்போது தவறுதலாக மறைந்துவிட்டன.


குறும்பாக்களின் உயிர்நாடியாகவிருக்கும் இந்தக் கடைசி வரிகளை அச்சில் தவறவிட்டமைக்காக, மஹாகவியிடமும், அவரது உறவினர்களிடமும், மஹாகவியின் கவி அபிமானிகளிடமும் சிரம் தாழ்த்தி மன்னிப்புக் கேட்கிறோம்.

குறும்பாக்களின் உயிர்நாடியில் நாமிழைத்த இந்தத் தவறை எமக்குச் சுட்டிக்காட்டிய, மஹாகவியின் நண்பரும், தமிழறிஞருமான பண்டிதர் க.உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது இந்த ஊடகப் பயணத்தில் இதுபோன்று நாம் இழைக்கக்கூடிய எந்தத் தவறையும் எமக்குச் சுட்டிக்காட்டி ஊடகப் பணியை நேர்த்தியாக்கப் பின்நிற்க வேண்டாம் என்று, எமது வாசக அன்பர்களிடம் வேண்டிக்கொள்கிறோம்.





தொலைபேசியிற் பேசிப் பேசித்
தொந்தரவுக் குள்ளானான் காசி
மலரை மணந் தான்! எனினும்
வாழ்கின்றான் – மீண்டும் அதே
தொலை பேசியிற் பேசிப் பேசி



பத்திரிகை நான் புரட்டிப் பார்த்தேன்
பழம் விலைக்கு விற்பதற்காய்ச் சேர்த்தேன்
உத்தரவில்லாமல் அதன்
உட்புகுந்த சுண்டெலியின்
புத்திரரைப் பின் எண்ணித் தீர்த்தேன்.



சொந்தத்திற் கார், கொழும்பிற் காணி,
சோக்கான வீடு, வயல், கேணி
இந்தளவும் கொண்டுவரின்
இக்கணமே வாணியின் பாற்
சிந்தை இழப்பான் தண்டபாணி.




"நன்றி சொல்வேன் என் எதிரிற் தோன்று,
நாளை இரவு!" என்றனன் உட்சான்று
"நன்றிதல்ல," என்றிழனும்,
சென்று பிழை கண்டு கொண்டாள்
1+1 = 3



காதலரின் ஓவியம் வரைந்தான்
கண்ணியம் உள்ளோர் என நினைந்தான்
மாதம், உருண்டோட மறு
கண்காட்சி வந்தது. ஃஆ,
தீது புரிந்தார் என உணர்ந்தான்.



நள்ளிரவில் வீடு வந்தார் சாம்பு.
நடுவழியில் தீண்டியது பாம்பு.
பிள்ளை பெரும் பீதியுற்றுப்
பிரக்கினை போய் மாண்டாராம் –
வெள்ளெனப் பார்த்தால் அது ஓர் தாம்பு

கருத்தோவியம்: - செள-

# குறும்பாக்கள்

# என்னை மறந்துவிடாதே..!

என் பேனாவோடு எனக்கிருந்த
நட்பின் ஆழம் அதிகமாய் உள்ளது..!
சில நேரம் வெட்கப் புன்னகையில்
பேனாவின் முகம் கூட சிவந்து போகிறது
உன்னைப் பற்றிய உரைகளினால்..!

உரைகளின் வரிகள் சுருக்கமானால்
கண்ணீர் வடிக்கிறது பேனா!!
சட்டையின் பையில் நீல நிறமாய்..!
நிறங்கள் மாறினாலும் வலிகள் மட்டும்
என்றும் மாறாமல் மட்டுமே உள்ளது..!

அடிக்கடி உன் நினைவால் துடிக்க மறக்கும்
என் இதயத்தை தன் கண்ணீர் கொண்டு
நனைத்து அழைத்து வருகிறது பூமிக்கு..!
உன்னைப் பற்றிய உரைகளைத் தொடர..!

உன்னைப் பற்றிய வரிகளில் மட்டும்
நிறப்பிரிகையை மிஞ்சும் அளவுக்கு
புதுப்புது வண்ணங்களை
தன்னுள்ளே உருவாக்கிக் கொள்கிறது..!

வண்ணங்களை வகைப்படுத்த
நாசாவின் விஞ்ஞானிகளின்
படையெடுப்பு என் வீட்டின் முன்னே
திருவிழாவைப் போல் உள்ளது..!

வாரம் சென்ற பின்னும்
தனக்கான வரிகள் மட்டும்
இன்னும் வரவில்லையே என்று
எண்ணி நேற்றைய மாலை
மரணத்தைத் தழுவினானடி
பெண்ணே! என் நண்பன்..!

அவன் போகும்போது உனக்காக
எழுதிய கடைசி வார்த்தை கண்ணீருடன்
'என்றும் என்னை மறந்துவிடாதே...!!!

-மா.மணிகண்டன்

# வலி – வழி

வலி இல்லாமல்
வாழ்க்கை இல்லை
ஆம்
வழி இல்லாமல்
வாழ்க்கை இல்லை

கல்வி ஒரு வழி
அதை வலி கொண்டு கற்றுக்கொள்
கடமை ஒரு வழி
அதை வலி கொண்டு உணர்ந்துகொள்
திருமணம் ஒரு வழி
அதை வலி கொண்டு புரிந்துகொள்
அனுபவம் ஒரு வழி
அதை வலிந்து சென்று பெற்றுக்கொள்


காதல் வலி
அதை வாழ்ந்து பார்த்து வழிமொழி
வீழ்ச்சி ஒரு வலி
மீண்டும் எழுச்சி என்பது ஒரு வழி
தோல்வி ஒரு வலி
மீண்டும் வெ(ற்)றி ஒரு வழி
மரணம் ஒரு வலி
அனுபவத்தில் இதுவொரு புது வழி

வலி இல்லாமல்
வாழ்க்கை இல்லை
ஆம்
வழி இல்லாமல்
வாழ்க்கை இல்லை

- சுரேஸ்

## மொழியோடு விளையாடு

இது தான் வாழ்க்கைக்கான எளிய மந்திரம். 'உங்களின் சிந்தனையும் செயலும் உங்கள் இலட்சியத்தை நோக்கியதாக இருக்கவேண்டும்' என்கிறார் ரொபின் சர்மா. அவரது




'மெகாலிவிங்' புத்தகத்திலிருந்து...

▶ சராசரியாக நாள் ஒன்றுக்கு நம் மனதில் 60 ஆயிரம் எண்ணங்கள் கடந்து செல்கின்றன. முந்தைய நாளின் எண்ணங்கள் அதில் கிட்டத்தட்ட 95சதவீதம். இந்தக்குறுகிய வட்டத்தில் இருந்து வெளியே வரப் பழகுங்கள். எல்லையில்லா எண்ணங்கள் தான் எதிர்காலத்துக்கான ஏணி. ஏக்கங்கள் எண்ணங்களாக மாறினால், ஏற்றம் நிச்சயம்!

▶ உங்கள் வாழ்க்கையின் தரம், நீங்கள் மற்றவர்களுடன் எவ்வாறு பேசிப் பழகுகிறீர்கள் என்பதைப் பொறுத்தே அமையும். மற்றவர்களுடன் என்பதைக் காட்டிலும் உங்களுடன் நீங்கள் எப்படிப் பழகுகிறீர்கள் என்பது முக்கியம். வானத்திலிருந்து எந்த தேவதையும் இறங்கி வந்து உங்களுக்கான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் வாரி வழங்காது. உங்கள் முனைப்பே உங்களை முன்னேற்றும். இது இயற்கையின் விதி!

▶ முயற்சிகளில் கவனம் செலுத்துங்கள். முடிவுகளில் அல்ல! எந்த ஒரு காரியத்தையும் விரும்பியோ, மற்றவருக்கு உதவும் பொருட்டோ, நல்ல பயிற்சியாகவோ செய்து பழகுங்கள். அதனால் கிடைக்கும் பணம், புகழில் கவனத்தைச் சிதைக்காதீர்கள். அவை தன்னால் பின் தொடரும்!

▶ தினமும் சிரிக்கப் பழகுங்கள். நாலு வயதுக் குழந்தை தினமும் சராசரியாக 500முறை சிரிக்கிறது. ஆனால் வளர்ந்து வாழ்க்கையை எதிர்கொள்ளத் தொடங்கியவுடன், நாம் தினமும் 15முறை சிரித்தாலே அதிகம். நம்பினால் நம்புங்கள், மனம்விட்டுச் சிரிப்பது ஹார்மோன்களைத் தூண்டிவிட்டு, உடலைச் சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது!

▶ சலனமற்று இருக்கப்பழகுங்கள். சராசரி மனிதன் ஒருமாதத்தில் முப்பது நிமிடங்கள்கூட ஆழ்ந்த அமைதியில் கழிப்பதில்லை. ஒருநாளில் பத்து நிமிடங்களாவது தனிமையின் அமைதியை, அதன் அதிர்வுகளை உணரப்பழகுங்கள்.


▶ உங்கள் இலட்சியங்கள் குறித்து எதிர்மறையான எண்ணங்கள் மனதினுள் எழுந்தால், உடனடியாக பொஸிட்டிவ் எண்ணங்களால் உங்கள் சிந்தனைகளை ஆக்கிரமித்துக் கொள்ளுங்கள். அந்த எண்ணங்கள் கற்பனைகளின் உச்சமாகக்கூட இருக்கலாம். ஆனால், ஒருபோதும் நெகட்டிவ் சிந்தனைகளின் நிழல்கூட உங்களுக்குள் படியவிடாதீர்கள்!

▶ உங்கள் அனுமதி இல்லாமல் உங்களை யாரும் நோகடிக்கவோ, காயப்படுத்தவோ முடியாது என்பதை உணருங்கள். நீங்கள் எதிர்கொள்ளும் எந்த ஓர் அனுபவத்தையும் உங்களுக்குச் சாதகமாக எவ்வாறு மாற்றிக் கொள்கிறீர்கள் என்பதில் அடங்கியிருக்கிறது உங்கள் வெற்றிக்கான சூட்சுமம். கசப்பான அனுபவங்கள் என்று உலகத்தில் எதுவுமே கிடையாது. அனுபவங்கள் மட்டுமே உண்டு!

▶ தன்மை என்றால் மலரைப்போல் மிருதுவாகவும், தடாலடி என்றால் இடியைப்போல் அதிரடியாகவும் இருக்கப்பழகுங்கள். 'சரிதான்' என்று ஊர்ஜிதமானால் உங்கள் கொள்கைகளை நிறைவேற்றத் தயங்காதீர்கள். எந்தச் சூழ்நிலையிலும் உங்களுக்கான மரியாதையை இழந்துவிடாதீர்கள்!

▶ மன அழுத்தம் தேவைதான்! மன உளைச்சலுடன் ஒரு செயலை செய்து முடிக்கும் போது, அதற்கென நமது மனமும் உடலும் சில தகுதிகளை வளர்த்துக்கொள்கிறது. ஆனால், தொடர்ச்சியான மன அழுத்தமோ, உளைச்சலோ ஆரோக்கியமானதல்ல. கடுமையான மன-அழுத்தத்தைத் தொடர்ந்து, சராசரி ஓய்வை விட அதிக ஓய்வெடுக்கவேண்டும்!

▶ 'கோபப்படுவது எவருக்கும் எளிது. ஆனால், தகுந்த காரணத்து-




க்காக, சரியான சமயத்தில், சரியான அளவில், சரியான முறையில், சரியான நபரிடம் கோபப்படுவது அனைவருக்கும் சாத்தியம் அல்ல. அது ஒரு தனிக்கலை!' என்கிறார் அரிஸ்ரோடில்.

# சிகரத்தைப்



நன்றி : "மெகா லிவிங்"

▶ நீங்கள் அறிந்தவர்களிலேயே மிகமிக நேர்மையான நபர் நீங்களாகத்தான் இருக்கவேண்டும்.

▶ மனதுக்கு அடிக்கடி ஓய்வு கொடுங்கள். மிகுந்த அழுத்தத்தை உணர்ந்தால், உட்கார்ந்த இடத்திலேயே உலகத்தை உலா வாருங்கள். அந்தக் கற்பனை உங்களை உற்சாகப்படுத்தும்!

▶ சுயமுன்னேற்றப் புத்தகங்களில் இருப்பவையெல்லாம் கடவுளின் வேதங்கள் அல்ல. அதில் உள்ளவற்றில் எவையேனும் உங்களுக்கு பொருந்துகிறது என நினைக்கிறீர்களோ, அவற்றை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். எப்படி ரெடிமேட் கடைகளில் இருக்கும் சட்டைகள் எல்லாமே உங்களுக்குப் பொருந்தாதோ, அதுபோலத்தான் சுயமுன்னேற்றக் கருத்துக்களும். இதை உங்களுக்கு வேறு யாரும் சொல்லமாட்டார்கள்.

**அறிந்து கொள்ளுங்கள்...**

**தெரிந்துகொள்ளுங்கள்....**

**புரிந்துகொள்ளுங்கள்...**

**சாதிப்பார்கள் சிலர், அதை வேடிக்கை பார்ப்பார்கள் பலர், 'என்ன நடந்தது?' என்று கேட்டுத் தெரிந்து கொள்வார்கள் அறிவிலர்.**

**வெற்றியாளர்கள் தாங்கள் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை அவர்களே தீர்மானிக்கும் வல்லமை உள்ளவர்களாக இருப்பார்கள்.**

**எந்தவொரு பிரச்சினையையும் ஆனந்தமாக அனுபவித்துத் தீர்வு காணுங்கள். ஒவ்வொரு சவாலும் அடுத்த சாதனைக்கான சாவி என்பதை மறக்கவேண்டாம்.**

**உங்களையே நீங்கள் வெற்றி கொள்ளவேண்டும். உங்களுக்குள் இருக்கும் வெற்றிதான் உங்களைச் சுற்றியும் பிரதிபலிக்கும்!**

**நாம் சந்தோசமாக இருப்பதால் சிரிப்பதில்லை. சிரிப்பதற்காகவே சந்தோசமாக இருக்கிறோம்.**

# பிடிக்க சிர

கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை வெறுமனே கையில் வைத்துச் செலவு செய்து தீர்க்காமல் வங்கியில் வைப்பிலிட்டுத் தேவைக்கேற்ப பயன்படுத்துவது நல்லது என்று முன்னர் இப்பகுதியில் பார்த்தோம்.

நிலையான வைப்பு, சேமிப்பு வைப்பு போன்றவற்றில் கிடைக்கக்கூடிய வட்டி இலாபம் என்பது தவிர, நடைமுறைக் கணக்கைப் பேணுவதால் மேலதிகப் பற்று, கடன் வசதி உள்ளிட்ட பல்வேறு வங்கி வசதிகளும் நமக்குக் கிடைக்கும் என்றும் சொல்லியிருந்தோம்.

பணத்தைக் கையிலெடுத்துச் செல்லாமலே பொருள் கொள்வனவும் செய்ய முடியும்.

இதுதவிரவும், மின்கட்டணம், தொலைபேசிக் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு




# அட்டைக்குள் அடங்கும் பணம்



ஆகமொத்தம், உழைக்கும் ஒவ்வொரு ரூபாவையும் வங்கியில் வைப்பிலிட்டுக் கையாள்வதால் பலவித நன்மைகள் எமக்குக் கிடைக்கின்றன.

ஆனால், அவசரத்துக்குப் பணம் எடுப்பதற்கு சமயங்களில் வங்கியில் நீண்ட வரிசையில் நேரத்தைச் செலவிட நேரிடுமே என்று நீங்கள் நினைக்கக்கூடும். வங்கி பூட்டியுள்ள நேரத்தில் பணம் தேவைப்பட்டால் என்ன செய்வதாம் என்றும் கேட்கலாம்.

இந்தச் சிரமங்களை நீக்கத்தான் வங்கிகள் ஏ.ரி.எம். அட்டைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இது மட்டுமன்றி, பல்வேறு விதமான பிளாஸ்ரிக் அட்டைகள் மூலம் அடிக்கடி வங்கிக்குச் செல்லாமலே பணத்தைக் கையாளக்கூடிய வசதியை வங்கிகள் வழங்குகின்றன.

இந்த அட்டைகளைப் பாவிப்பதன் மூலம், பணத்தைக் கையிலேயே கொண்டு திரிந்து திருடர்களிடம் இழக்கவேண்டியிருக்காது என்பதுடன், உரிய வங்கிக் கருவி வசதிகளைக் கொண்ட வர்த்தக நிலையங்களில்




கட்டணங்களையும் இந்த அட்டை மூலமே இலகுவாகச் செலுத்தி சிரமத்தையும், அலைச்சலையும் தவிர்க்கவும், இணையத்தினூடாகப் பணப் பரிமாற்றம் செய்யவும் முடியும்.


இந்தப் பண அட்டை சேவையை 24x7x365 என்றவாறு, வருடத்தின் அனைத்து நாட்களும், முழு நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

ATM அட்டைகள், பற்று / செலவு அட்டைகள் (Debit cards), கடனட்டைகள் (Credit Cards) என இந்த வங்கி அட்டைகள் நமது அடையாள அட்டையின் அளவில்(86 X 54 மி.மீ.), பொக்கற் பேஸில் கொண்டுசெல்லக்கூடியதாக உருவாக்கப்-பட்டுள்ளன. இவற்றில், உங்கள் தேவைக்கே-ற்ற அட்டைகளைப் பெற்று பணக் கையாள்கையை நீங்கள் இலகுவாக்கிக் கொள்ள முடியும்.

இந்த அட்டை வரிசையில் பிரதானமானதும், பொதுவாக அனைவருக்கும் தேவைப்படுவதுமான ஏ.ரி.எம். மற்றும் டெபிட் அட்டைகள் பற்றிச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

**ATM அட்டைகள் :**
வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிக்கும்போதே இவ்வட்டைக்கும் விண்ணப்பித்தால், எமக்குரிய அட்டையையும், இரகசிய இலக்கத்தையும் (PIN – Personal Identification Number) பெற்றுக்கொள்ளலாம். இந்த அட்டையில் உங்கள் படத்தையும் சேர்த்துக்-கொள்வது பாதுகாப்பானது.

விண்ணப்பித்து சுமார் ஒரு வாரத்துக்குள் அட்டையும், இரகசிய இலக்கமும் உங்கள் கைசேரும். இரகசிய



இலக்கத்தைப் பார்த்து, பாதுகாப்பாக எங்காவது குறித்துக்கொண்ட பின், இரகசிய இலக்கம் அனுப்பப்பட்ட கடிதத்தை அழித்துவிடவேண்டும். அட்டையில் குறிப்பிட்ட இடத்தில் உங்கள் கையொப்பத்தை இட்ட பின் அதைப் பயன்படுத்தலாம்(கையொப்பம் இல்லாவிட்டால் அட்டை செல்லுபடியாகாது).

வங்கிகள் மற்றும் பொது இடங்களில் உள்ள தானியங்கி பண வழங்கி இயந்திரம் (Automatic Teller Machine) ஊடாக இவ்வட்டை மூலம் உங்கள் இரகசிய இலக்கத்தைப் பயன்படுத்தி, சேமிப்பு, நடைமுறைக் கணக்குகளிலிருந்து பணத்தை மீளப்பெற முடியும். குறிப்பிட்ட வங்கியின் எந்தவொரு கிளையின் தானியங்கி இயந்திரத்திலும் இந்த அட்டையைப் பயன்படுத்தலாம்.

கணக்கிலுள்ள மீதி, கணக்கின் வைப்பு-மீளப்பெறல் வரலாறு, இன்னோர் கணக்குக்கு பணத்தை மாற்றுதல், பாதுகாப்புக்காக உங்கள் இரகசிய இலக்கத்தை மாற்றுதல் உள்ளிட்ட காரியங்களையும் இதன்மூலம் செய்யமுடியும். எமது விருப்பத்துக்கேற்ற மொழியில் இந்தச் சேவையைப் பயன்படுத்தலாம்.

இயந்திரம் மூலம் ஒரு நாளில் மீளப்பெறக்கூடிய பணத்தின் அளவுக்கு ஒரு எல்லை உண்டு. பொதுவாக 20,000-80,000 ரூபா வரையிலே அனைத்து வங்கிகளும் அட்டைப் பரிமாற்றத்துக்கு இடமளிக்கின்றன.

இச்சேவையைப் பயன்படுத்தும் நேரத்துக்கமைய குறிப்பிட்டளவு சேவைக் கட்டணமும் அறவிடப்படுகின்றது. பொதுவாக வங்கி வேலை நேரங்களில் இந்தச் சேவை இலவசமாகவே வழங்கப்படுகிறது.

**பற்று / செலவு அட்டை (Debit Card)**

ATM அட்டை மூலம் எமது கணக்கிலுள்ள பணத்தை மீளப்பெறும் செயற்பாட்டை மட்டுமே மேற்கொள்ள முடியும். ஆனால், டெபிட் அட்டை மூலம் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களில் பொருள் கொள்வனவு செய்யவும், மின்சார, தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்தவும் முடியும்.

அனேகமாக VISA / Master என்று முத்திரையிடப்படும் இந்த அட்டை மூலம், அதே முத்திரை கொண்ட எந்தவொரு வங்கியின் ஏ.ரி.எம். இயந்திரம் மூலமும் பணத்தை மீளப்பெற முடியும். (வங்கிகளுக்கிடையிலான பணப்பரிமாற்றக் கட்டணம் அறவிடப்படும்). இதனால், நீங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கியின் இயந்திரம் இல்லாத இடங்களிலும் உங்கள் வங்கிக் கணக்கிலுள்ள பணத்தை மீளப்பெற முடியும்.

எந்த நாட்டிலும் எந்தப் பிரதேசத்திலும் VISA முத்திரை பதித்த ஏ.ரி.எம். இயந்திரங்களில் இது ஏற்றுக்கொள்ளப்படும். வைப்பிலிடப்பட்ட பணம் அந்த நாட்டுப் பெறுமதியிலேயே கழிக்கப்படும் (மீண்டும் நாடுகள், மற்றும் வங்கிகளுக்கிடையிலான பணப் பரிமாற்றக் கட்டணம் மற்றும் வரிச் செலவுகள் கழிக்கப்படும்).

இவ்வட்டை மூலம், அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களில் பொருள் கொள்வனவு செய்ய முடியும். இதன்போது, உடனடியாகவே எமது வங்கிக் கணக்கிலிருந்து பணம் கழிக்கப்பட்டுவிடும்.

கையில் பணம் தேவையில்லை. இவ் அட்டை இருந்தாலே போதும். விரும்பிய பொருளை விரும்பின நேரத்தில் வாங்கி விடலாம்.

**தொலைந்தால்....?**

அட்டை தொலைந்துபோனால் உடனடியாக வங்கிக்கு இதனை அறியத்தருவதன் மூலம் வேறு யாராவது உங்கள் அட்டையைப் பயன்படுத்திப் பணக் கொடுக்கல் வாங்கல் செய்வதைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

அதேபோல், இந்த அட்டைக்குரிய இரகசிய ‘பின்’ இலக்கத்தை வேறு யாரும் அறிய இடமளிக்கக்கூடாது. உங்கள் அட்டையை உங்களைத் தவிர வேறெவரும் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்று வங்கி ஆலோசனை கூறுகிறது.


இந்த அட்டை மூலம் பணப் பரிமாற்றங்களைச் செய்வதற்கு வங்கியில் போதிய பணம் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். கடன் அட்டைகள் போன்று வைப்பில் இல்லாத பணத்தைப் பயன்படுத்திப் பொருள் கொள்வனவு செய்ய இந்த அட்டைகள் இடமளிக்கா.....

அதுசரி, அதென்ன கடன் அட்டை....?

இதுபற்றி அடுத்த இதழில் பார்ப்போமா? ●

–ம.யசோ





# நவாலியில் நடந்தது என்ன?

"நேரம் மதியம் 12.50 இருக்கும். வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது திடீரென பாரிய சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் வயல் நிலத்திலிருந்த மழை நீர், சூறாவளி போன்று சுழன்று வானத்தை நோக்கி மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது. வயலின் பல்வேறு பகுதிகளிலும் சுழன்றடித்து நீண்டு பரவி வானத்திற்கு மழை நீரைக் கொண்டுசென்றபோது, தூரத்தில் 'றொக்கட்' சென்றது போன்ற வடிவம் தென்பட்டது".

கடந்த டிசம்பர் 12ம் திகதி நவாலி, களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கும் (பிட்டி அம்மன்) அம்பன்குளப் பகுதிக்கும் இடையில் நடைபெற்ற இந்த நீர்ச்சுழல் காட்சி சுமார் அரைமணி நேரம் வரையில் நீடித்திருந்தது. இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றது இதுவே முதல்தடவை என்பதால், வயலில்வேலை செய்துகொண்டிருந்தோர், அயலிலிருந்தோர் என அனைவருமே பதற்றமடைந்தனர்.

2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி தாக்கத்தினால் இயற்கை அனர்த்தம் தொடர்பான அச்சத்திலிருந்த மக்கள் இதுவும் ஒருவகை சுனாமிதானோ என்றெண்ணிப் பதறியடித்தனர். சிலர் வீடுகளை விட்டு ஓடத் தொடங்கினர்.

இந்த இயற்கை அனர்த்தம் தொடர்பாக பரபரப்பாக எங்கும் செய்தி பரவியதுடன், அடுத்தநாள் பத்திரிகைகளிலும் செய்தி வெளியாகியிருந்தது. எனினும், உண்மையில் நடந்தது என்ன என்பதை யாருமே இனங்கண்டு விளக்கியிருக்கவில்லை. எமது இணையத்தளமான "ஜ.்.ப்னா டுடே" (www.JaffnaToday.com) மட்டுமே இது பற்றிய உண்மையான விளக்கத்தை உரிய ஆதாரங்களுடன் மக்களுக்கு அறியத்தந்திருந்தது.

நீர்ச்சுழல் (Tornado – Waterspout) என்றழைக்கப்படுகின்ற ஒரு வகை சூறாவளித் தாக்கமே இதுவென்று இனங்காப்பட்டபோதும், யாழ்ப்பாணத்திலோ அல்லது இலங்கையின் வேறெந்தப் பகுதியிலோ முன்னர் இதுபோன்று நடைபெற்றதுண்டா என்று, யாழ் வானிலை அவதானிப்பு நிலைய அதிகாரி வேலாயுதம் புஸ்பநாதனைச் சந்தித்து விளக்கம் கேட்டோம்.

"நவாலியில் நடந்த இச்சம்பவம் நீர்த்தாரை (Waterspout) ஆகும். ரொனாடோ (Tornado) எனப்படும் சுழல்காற்றுத் தாக்கம் நீரின்மேல் நிகழ்வதே நீர்த்தாரை ஆகும். திடீரென ஏற்பட்ட வானிலை மாற்றத்தால், வான் பரப்பில் தோன்றிய அமுக்கக் குறைவு காரணமாக அங்கு ஏற்பட்ட திடீர் வெற்றிடத்தை (Vacuum) நோக்கி தரையிலிருந்து நீர் வானத்தை நோக்கி உறிஞ்சப்பட்டுள்ளது" என்று விளக்கம் தந்தார் வேராயுதம் புஸ்பநாதன்.



வேலாயுதம் புஸ்பநாதன்
திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையம்



"ரொனாடோ (Tornado) என்பது நிலத்தில் (LandSpout), நீரில் (WaterSpout), மணற்தரையில் (Dust Devil), தீயில் (FireWhirl) என எந்தவொரு பூமிப்பரப்பிலும் நிகழக்கூடியது. இலங்கையில் அடிக்கடி இது ஏற்பட்டிருந்தாலும், யாழ்ப்பாணத்தில் இதுவே முதல் தடவை" என்றும் அவர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், புவியியல்துறை வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் இதனை எம்மிடம் உறுதிப்படுத்தினார்.

"இலங்கையில் இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி ஏற்பட்டாலும், பம்பலப்பிட்டியில் 2008ஆம் ஆண்டு நீர்த்தாரை ஏற்பட்டதுடன், 2010 மே மாதம் பொலனறுவை மாவட்டத்தில் ரொனாடோ சுழல்காற்றும், அண்மையில் நவாலியில் இடம்பெற்ற நீர்த்தாரையும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன" என்று கூறிய பேராசிரியர், இவை ஒவ்வொன்றையும் எமக்கு விளங்கப்படுத்தினார்.

## நிலத்தாரை (Landspout)

பொதுவாகவே நிலத்தாரை சூறாவளியை விடப்பலம் குறைந்ததாகும். இதுவே பொதுவாக Tornado என்றும் சொல்லப்படுகிறது.




சூரிய வெப்பம் அதிகமாயுள்ளபோது நீர் ஆவியாகி முகில் கூட்டங்கள் திரளாக உருவாகின்றது. இந்தத் திரள் கார்முகிலின் (Cumulonimbus) விளைவாலேயே அமுக்கம் குறைந்த இடங்களில் சுழல் காற்று ஏற்படுகின்றது. அதிகபட்சம் மணிக்கு 177 கி.மீ. வேகம் வரையில் வீசக்கூடிய இது, அதன் வேகத்-தைப் பொறுத்து முழு வீட்டையோ அல்லது சிறிய பொருள்களையோ மேலிழுத்துச் செல்லும்.



## நீர்த்தாரை (Water Spout)

நீரின் மேலே சுழல்காற்று வீசிவரும்போது தாரையாகத் தோன்றும். நீர் நிறைந்துள்ள பகுதிகளுக்கு மேலே வான்பரப்பில் அமுக்க வித்தியாசம் ஏற்பட்டால் நீர் மேல் நோக்கி உறிஞ்சப்படும். நீரத்தாரைகள் வேகம் குறைவாக இருப்பதால் அதன் பாதிப்புகளும் குறைவாகவே



இருக்கும். பாய், சிறிய பாரமற்ற பொருள்கள் போன்றவை மேல்நோக்கி இழுக்கப்படலாம்.

## துகள் அடைப்பேய்கள் (Dust Devil)

பாலைவனம் அல்லது வறண்ட நிலப்பரப்புக்களில் வெப்பம் தெளிவாக உள்ள நாட்களில் துகள் அடைப்பேய்கள் வரும். இது அதிகம் தீங்கு ஏதும் செய்யாது என்றாலும் சிறிய அளவில் சேதங்கள் ஏற்படுத்தவல்லவையே. சாலைகளில் ஓடுகின்ற வண்டிகளையும், வாகனங்களையும் அவை தாக்கும். காண்போரின் கண்களில் தூசுகளை அள்ளி வீசும்.

## தீச் சுழல்கள் (Fire Whirl)

சில நேரங்களில் காடுகளில் பரவும் காட்டுத்தீ அல்லது எரிமலை வெடிப்பு தீச் சுழல் காற்றை உருவாக்கும். அது சுற்றி வீசும்போது அனலையும் புகையையும் கக்கும்.



நெருப்பின் மேல் பரப்பில் பலம் குன்றிய சுழல் அல்லது சுழி காற்றில் உள்ளபோது இது நடைபெறும்.

சூறாவளியை ஒத்த தன்மையை இந்த ரொனாடோ சுழல்காற்று வகைகள் ஒவ்வொன்றும் கொண்டிருந்தாலும், சூறாவளியைப் போன்று இது பரந்த ஒரு பிரதேசத்தைத் தாக்குவதில்லை. குறிப்பிட்ட ஒரு பகுதியை நோக்கித் தாக்குவதால், ஒரு வீட்டின் மீது இதன் தாக்கம் ஏற்பட்டால், அருகிலுள்ள வீட்டுக்கு எதுவித சேதமும் ஏற்படாது என்று கூறிய பேராசிரியர், இவ்வாறான இயற்கை மாற்றங்கள் ஐப்பசி, கார்த்திகை, மாதங்களிலேயே பெரும்பாலும் நடைபெறலாம் என்று தெரிவித்தார்.

அமெரிக்காவில் இவ்வாறான சுழல் காற்றுத் தாக்கம் அடிக்கடி ஏற்படுவதுடன், இதனால் பொதுமக்களுக்கு சேதங்கள் ஏற்படுவதும் வழக்கம் என்றும் கூறினார். ●



**- நா.சாந்தரூபன், 2ம் அணி**

# யாழ்ப்பாணத்தில் ஷொப்பிங்



போக்குவரத்துச் சிக்கல்கள், பொருளாதாரத் தடைகள் மற்றும் நெருக்கடிகள் தளர்ந்துள்ள புதிய சூழலில், யாழ்ப்பாணத்தில் இப்போது எல்லாவிதமான பொருள்களும் தாராளமாகக் கிடைக்கின்றன. "இதுக்கெல்லாம் கொழும்புக்குத்தான் போகவேண்டும்" என்றிருந்த நிலை மாறி, தேவையான எந்தப் பொருளையும் யாழ்ப்பாணத்திலேயே பெறக்கூடியளவுக்கு யாழ் வர்த்தகம் துரிதமாக முன்னேறியிருக்கிறது.



வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் ஒரே கூரையின்கீழ் தரும் பல்பொருள் அங்காடிகள் முதல், நவீன இலத்திரனியல் பொருள்கள், மின்சார உபகரணங்கள், ஆடைத் தெரிவுகள் என்று எல்லா விதமான பொருள்களையும் இப்போது யாழ்ப்பாணத்திலேயே பெறமுடிகிறது.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நமக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் வழங்கிவரும் வர்த்தக மையங்கள் சிலவற்றை இங்கே அறிமுகப்படுத்துகிறோம். அடுத்து வரும் இதழ்களில் இன்னும் இதுபோன்ற இன்னும் பல வர்த்தக மையங்களை உங்களுக்கு இப்பகுதியில் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

### பல்பொருள் அங்காடிகள்:

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட பல்பொருள் அங்காடி, கே.கே.எஸ் வீதியிலுள்ள அன்னை நாகா ஃபூட் சிற்றியாகும். இங்கு அத்தியாவசிய உணவுப்பொருள்கள், அன்றாட வீட்டுப் பாவனைப் பொருள்கள், புடைவை, மருந்து வகைகள், அலங்காரப் பொருள்கள் என எல்லாவிதமான பொருள்களையும் ஒரே இடத்-தில் பெறக்கூடியதாக உள்ளது.

இதுதவிர, யாழ் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள New Cost Cutter, நாவலர் வீதியிலுள்ள TCT Multi Trade Centre, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ராம் சுப்பர் சிற்றி என, பல்பொருள் அங்காடிகள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் இப்போது திறக்கப்பட்டு மக்களுக்கு வேண்டிய அனைத்துப் பொருள்களையும் ஒரே கூரையின்கீழ் வழங்கிவருகின்றன.


மரக்கறி, பழங்கள், இறைச்சி, குளிர்பானம், ஐஸ்கிறீம் வகைகள், அழகுசாதனப் பொருள்கள், மருந்து வகைகள் எனப் பல்வேறு விதமான பொருள்களையும் மக்களின் தேவையறிந்து இவை வழங்கி வருகின்றன.

### குழந்தைகள் – சிறுவர்களுக்கு:

குழந்தைகள் - சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விசேடமான உடைகள், சிறுவர்களின் நவீன விளையாட்டுப் பொருள்கள், நுளம்புவலை, குழந்தைகளுக்கான உணவு, பால்மா வகைகள் உட்பட அனைத்துப் பொருள்களையும் ஒரே இடத்தில் வழங்குகிறது பலாலி வீதி, திருநெல்வேலியிலுள்ள MOTHER AND BABY CARE .

### ஆடைத்தெரிவுக்கு:

ஆடைத் தெரிவுகளுக்கு யாழ்ப்பாணத்தில் ஏராளமான விற்பனை நிலையங்கள் உள்ளன. இருந்தாலும், எமக்குத் தேவையானவற்றை நாமே பார்த்துத் தெரிந்தெடுக்கக் கூடியவாறாக நவீன முறையில் அவற்றைக் காட்சிப்படுத்தியுள்ளது கே.கே.எஸ். வீதியிலுள்ள Style Park.





இதுதவிரவும், நவீன ஆடைத் தெரிவுகளைக் கொண்டதாய், மிலேனியம் பெஷன் & பொம்பே பஷார், சரவணா ரெக்ஸ், லிட்டில் இந்தியன் பெஷன், வாணி ரெக்ஸ் என நவீன தெரிவுகளுக்கேற்ற வகையில் யாழ் புடவை விற்பனை மையங்கள் புதுவளர்ச்சி கண்டு வருகின்றன.

## சிற்றுண்டிகள்:

மிக்சர், பகோடா போன்ற கார உணவுகளையும், பிஸ்கட், சொக்லெட் வகைகளையும், குளிர் பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள் என எமக்குப் பிடித்தமான அனைத்துச் சிற்றுண்டி வகைகளையும் பலாலி வீதியிலுள்ள அல்பா மிக்சர் ஒரே இடத்தில் வழங்குகிறது.



இதுதவிர, அனைத்து வகையான மங்கல நிகழ்வுகளுக்குமான இனிப்பு வகைகள் மற்றும் சிற்றுண்டிகளை ஒரே இடத்தில் மொத்தமாகவும், சில்லறையாகவும் வழங்குகிறது கே.கே.எஸ் வீதியிலுள்ள குயின்ஸ் பேக்கரி & பம்பாய் சுவீட்ஸ்.

இப்போது, முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் Pizza பிரியர்களுக்காக பலாலி வீதியிலுள்ள Pizza Corner, பிரதான வீதியிலுள்ள தாஸ் பிஸ்சா என்பன தமது சேவையை ஆரம்பித்துள்ளன.

## கணினி மற்றும் கணினிசார் உபகரணங்கள்:

அனைத்துவிதமான கணினி வகைகள், கணினிசார் உபகரணங்களை உத்தரவாதத்துடன், பகுதிக்கட்டணத்திலும் கொள்வனவு செய்வதற்கு, நாவலர் வீதி லக்ஷன் பிளாஸாவில் PC Power Unit, ஸ்ரான்லி வீதியிலுள்ள PC House, பலாலி வீதியிலுள்ள Nalin காட்சியறை என ஏராளமான கணினி விற்பனை மையங்கள் யாழ் நகரில் இப்போது உள்ளன.

## டிஜிடல் பிறின்டிங்:

ஒளிப்பட அச்சாக்கம், அல்பம் வடிவமைப்பு, அழைப்பிதழ்கள், விளம்பரப் பதாகைகள் என அனைத்து வகையான டிஜிடல் பிரின்டிங் தேவைகளுக்கும், பெருமாள் கோவில் வீதியிலுள்ள Konica Color Lab, பலாலி வீதியிலுள்ள Vista Vision, யாழ் நகரிலுள்ள மூர்த்தி கலர் லாப், நாவலர் வீதி லக்ஷன் பிளாசாவிலுள்ள Andra Digital என்பவற்றை நாடலாம்.

## பாடசாலை உபகரணங்கள்:

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதிகளுக்கு, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பரகத் பேப்பர் ட்ரேடிங் கம்பனி, கே.கே.எஸ். வீதியிலுள்ள ஆசிர் வணிக நிலையம், மற்றும் பேப்பர் ஹவுஸ், பூபாலசிங்கம், அன்னை புத்தக நிலையம் என்பவற்றை நாடலாம்.

## ஹோட்டல் மற்றும் தங்குமிடங்கள்:

துரித வளர்ச்சி கண்டுவரும் உல்லாசப் பயணத்துறைக்கு ஈடு கொடுக்கும் வகையில், Tilko Hotel, Green Grass, Cozy, Lavasun, யாழ்பாடி என ஏராளமான உல்லாச விடுதிகள் மற்றும் உணவகங்கள் என்பன, தங்குமிட வசதிகளுடன் சிறந்த உணவு வகைகளையும் வழங்கி வருகின்றன.

## தளபாடங்கள்:

வீட்டுக்கும், அலுவலகங்களுக்கும் தேவையான பிளாஸ்ரிக், இரும்பு, மரத் தளபாடங்களை நாவலர் வீதியிலுள்ள டம்ரோ, கே.கே.எஸ். வீதியிலுள்ள மங்களா மற்றும் மானிப்பாய் வீதியிலுள்ள Arpico காட்சியறை என்பன வழங்கி வருகின்றன.

## மின்சார உபகரணங்கள்:

அனைத்து விதமான மின்சார உபகரணங்களையும் மானிப்பாயிலுள்ள சுந்தர்சன், ஸ்ரான்லி வீதியிலுள்ள Jaffna Elecltricals, Media Mart, Singer காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள-முடியும்.

## மோட்டார் வாகனங்கள்:

ஸ்ரான்லி வீதியிலுள்ள யசோ மோட்டோர்ஸ் மற்றும் டிமோ, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள Browns, கஸ்தூரியார் வீதியலமைந்துள்ள இரத்தினகோபால்ஸ், பிரதான வீதியிலுள்ள டேவிட் பீரிஸ் என்பன எமக்குத் தேவையான மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களை வழங்குகின்றன.



- ஜெ.பாலகுமார்

2ம் அணி



# வாசகர் மனதில்


“அழகான அட்டைப்படத்துடன் வெளியாகியுள்ள ‘சிகரம் தொடு’ மார்கழி இதழ், பொருத்தமான தலைப்புக்களுடன் இன்றைய சமூகத்திற்கேற்ற விடயங்களை உள்ளடக்கியிருந்தது.

‘தற்கொலைக்கோ கல்வி கற்றோம்?’ என்ற பகுதியினூடாக இளைய தலைமுறையினரை சுண்டியிழுத்து, ‘A/L க்குப் பின்னர் ஏராளம் வாய்ப்புக்கள்’ உண்டு என்பதைக் காட்டியிருப்பது பாராட்டுக்குரியது. ‘கெட்டுப்போனதா குட்டி யாழ்ப்பாணம்?’, ‘பள்ளிக்காதல் பயன் தருமா?’ மூலம், இளய தலைமுறையினரை இழித்துரைப்போருக்கு கருத்துக்களை இடித்துரைத்தமைக்கு சபாஷ் போடலாம்.

சமூக அக்கறையைப் பிரதிபலிக்கும் ‘நில்! கவனி!! செல..!’, சாதனையாளர்களை தட்டிக்கொடுக்கும் ‘ஹரிச்சந்திராவின் பசுமை இல்லம்’ மற்றும் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்ட வைக்கும் ‘வாசிக்க நேரமில்லை’ ஆக்கங்களும் சிறப்பு.கணி-நீ சிறப்பிதழ் ஆரம்ப அறிவு முதல் இன்றைய தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம் வரை அனைவருக்கும் பிரயோசனமாக உள்ளமை தனித்துவம்.

இதுபோன்ற ஆக்கங்களுடன் இம்மலர் தொடர்ந்து வெளிவந்து மணம் பரப்பும் என நம்புகிறேன்.”

**– நாகநந்தினி, கோப்பாய்.**




“சிகரம் தொடு சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து அம்சங்களும் சிறப்பானவை, தரமானவை. சமூகச் சீர்கேடு எனும் முக்கிய விடயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி நல்வழி காட்டுவதாய் எழுதப்படுவது சிறப்பாகும். கல்வியில் மாணவர்களுக்குள்ள ஏக்கங்களை போக்கி சரியான பாதையைக் காட்டுவதாயும், அனைவரும் வாசிக்கக்கூடியவாறும் அனைத்தும் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

இன்னுமின்னும் ‘சிகரம் தொடு’ பிரகாசிக்க எனது வாழ்த்துக்கள்”

**– ச. ஜெயந்தினி,**
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி

## வாசகர் கருத்து

வாசித்து முடித்துவிட்டீர்களா?

‘சிகரம் தொடு’ இளையோர் மாதாந்த சஞ்சிகை தொடர்ந்து உங்களுக்கு மென்மேலும் பயனளிக்கும் விதத்தில் அமைவதற்காக ஒரு நிமிடம் செலவிடுங்கள்.

நீங்கள் வாசித்து முடித்தவற்றில், உங்களுக்கு மிகவும் பிரயோசனமாக அமைந்த விடயங்கள் எவை?

ஏன் அவை உங்களுக்குப் பிரயோசனமாக அமைந்தன?

இன்னும் என்னென்ன விடயங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

என்பவற்றைச் சுருக்கமாக எமக்கு எழுதியனுப்புங்கள்.

**சிகரம் ஊடக இல்லம், இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். SMS: 077 77 33 931**

தெரிவுசெய்யப்படும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு **3 மாத** சஞ்சிகை இலவசம்!

## சந்தா விண்ணப்பப் படிவம்

‘சிகரம் தொடு’ இளையோர் மாதாந்த சஞ்சிகையைத் தொடர்ந்தும் உங்கள் வாசலிலேயே பெற்றுக் கொள்வதற்கு அதன் சந்தாதாரர் ஆகிவிடுங்கள்.

1. பெயர் ..........................................
2. தொழில் ..........................................
3. முகவரி ..........................................
4. தொ.பே ..........................................
5. மின்னஞ்சல் ..........................................

இந்தப் படிவத்துடன் ‘சிகரம் தொடு’ இளையோர் மாதாந்த சஞ்சிகைக்கான சந்தாக் கட்டணம் **600** ரூபாவை (தபால் செலவு உட்பட), ‘சிகரம் ஊடக இல்லம்’ என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலையாக அல்லது யாழ்ப்பாணம் தபால் அலுவலகத்தில் மாற்றத்தக்க காசுக்கட்டளையாக அனுப்பி வையுங்கள்.

**“வாசகர்களின் ஆதரவுப் பலத்திலேயே ஊடகமொன்று வெற்றி பெறுகிறது”**

**சிகரம் ஊடக இல்லம்**
**இல.221, பலாலி வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்**


"நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்"
தமிழில் தரமான செய்திகளுக்கு
WWW JAFFNA TODAY COM
Northern SriLanka News & Views